# வெற்றியின் இரகசியங்கள்



சகரியா பூனன்

# வெற்றியின் இரகசியங்கள்

சகரியா பூணன்

"*கிறிஸ்துவுக்குள் எங்களை எப்பொழுதும்*
**வெற்றி சிறக்கப்பண்ணும்....**
*தேவனுக்கு ஸ்தோத்திரம்" (2 கொரி, 2:14)*

★ 10th Edition (2015)

## வெற்றி பாதைக்குள்...


1. நிலையான வெற்றி வாழ்க்கை - 5

2. விசுவாசத்தின் நிர்ப்பந்தமான அவசியம் - 7

3. தேவனுடைய வார்த்தைக்கு ஏன் 'பய பக்தி' இல்லை? - 11

4. தெய்வ அன்பில் பிறந்த அவரது கற்பனைகள் - 13

5. இயேசுவை நேசித்ததுபோல் நம்மை நேசிக்கும் தேவன் -16

6. ஒவ்வொரு பாடுகளிலும் தேவ நோக்கம் உண்டு -20

7. திராணிக்குமேல் நாம் சோதிக்கப்படுவதில்லை - 25

8. தாழ்மையுள்ளவர்களுக்கு தேவன் தரும் கிருபை - 29

9. சூழ்நிலைகளுக்குப் பின் தேவன் இருக்கிறார் - 33

10. தேவன்மீது விசுவாசமா? பணத்தின்மீது விசுவாசமா? - 41

11. பெலனற்றவர்களுக்கு உதவும் தேவன் - 46

12. சகலத்திற்கும் போதுமான அவரது கிருபை - 49



வெற்றியின் இரகசியங்கள் (Secrets Of Victory) - 1982



Copyright - ZAC POONEN

இந்த புத்தகம் பதிப்புரிமை பெற்றுள்ளது. இந்த பணியின் எந்த பகுதியும் மறுபதிப்போ அல்லது எந்த ரூபத்திலும் கடத்தல் கூடாது. அதாவது, பதிப்பாளர் எழுதித்தந்த அனுமதி இல்லாமல் மின்னனு சாசனமோ அல்லது எந்திர சாசனமோ (ஜெராக்ஸ் உட்பட) பதிவு செய்தல் கூடாது.



**மேலும் விபரங்களுக்கு**

Christian Fellowship Centre
#69, Bellahalli, Kannur Post,
Bengaluru – 562149, Karnataka, India
email: cfc@cfcindia.com

இனியும்

எனக்கது இரகசியம் அல்லவே!

**என் இயேசுவுக்கு**

கிருபை பொழிந்தீர்,

நேசித்தீர், பாதுகாத்தீர்!

**என் இயேசுவுக்கு**

உம் வல்லமை அருளி

வெற்றி சிறக்கச் செய்தீர்!

**“இப்போது”**

அதே கிருபை அதே நேசம்

அதே பாதுகாப்பு

அதே வல்லமை அதே பெலன்

**அதே வெற்றி**

இந்நீசனாம் எனக்கும்

உளம் பொங்கத் தருகின்றீர் – ஆ!

இனியும்

எனக்கது இரகசியம் அல்லவே!!

1

# நிலையான வெற்றி வாழ்க்கை



நம் வாழ்க்கையில் 'தொடர்ச்சியான' வெற்றியின் ஜீவியமே தேவனுடைய சித்தமாகும்.! வேதாகமத்தில் இது மிகவும் தெளிவாகவே உள்ளது. குறிப்பாக மூன்று வசனங்களைக் காண்போம்:

*1)* "கிறிஸ்துவுக்குள் **எப்பொழுதும்** எங்களை வெற்றி சிறக்கப்பண்ணுகிற... தேவனுக்கு ஸ்தோத்திரம்" *(2 கொரிந்தியர் 2:14).*

*2)* "இவை **எல்லாவற்றிலேயும்** நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயம் கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோம்..." (ரோமர் 8:37).

*3)* "நீங்கள் **பாவம் செய்யாதபடிக்கு** இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்" *(1 யோவான் 2:1).*

இவ்வாறு பறைசாற்றி முழங்கும் அநேக வசனங்கள் இருந்தும், கிறிஸ்தவர்களுக்கு **இம்மகிமையான சத்தியத்தை** உணர வைப்பது மிகவும் கடினமான பணியாகவே இருக்கிறது. நாம் வேத வாக்கியங்களை அப்படியே சிறுபிள்ளையைப்போல விசுவாசித்து விட்டால் பிரச்சனையே இல்லை! ஏனெனில், வேதத்தில் சத்தியம் அத்தனை தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறதே!! ஆனால், நம்முடைய "சிந்திக்கும் திறமையே" (சுய-அறிவே) தேவனுடைய வார்த்தையை எளிமையாய் விசுவாசித்து ஏற்றுக்கொள்வதற்கு இன்று அநேகருக்குப் பெரும் தடையாய் வந்து நிற்கிறது.

முதலாவது, தொடர்ச்சியான வெற்றியின் வாழ்க்கை வாழ தேவன் விரும்புகின்றார் என்பதையாவது நாம் உறுதியாய் அறிந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், இப்படிப்பட்ட வாழ்க்கைக்கு நாம் ஒருபோதும் **விசுவாசம்** கொண்டிட முடியாது. இந்த விசுவாசம் இல்லையென்றால் நீங்கள்

*ஜெய ஜீவியத்திற்குள் பிரவேசிப்பதென்பது ஒருபோதும் கூடாத காரியம்! தேவனுடைய வார்த்தையில் "இறைவனின் சர்வ வல்லமையை" கண்டுகொள்வதே விசுவாசத்தின் அடிப்படையாகும்!!*

*நீங்கள் அநேக ஆண்டுகள் உங்கள் வாழ்வில் தோற்கடிக்கப்பட்ட ஓர் வாழ்க்கையை வாழ்ந்திருக்கலாம்! இருப்பினும், நீங்கள்* **சத்தியத்தை** *தேவனுடைய வசனத்தில் காணமுடிந்து, அதனிமித்தம்* **தேவன்பேரில் விசுவாசம்** *வைப்பீர்களென்றால், அதுவே வெற்றியுள்ள வாழ்க்கைக்கு உங்களை வழிநடத்தும் முதல் அடிச்சுவடாகும்!*

# விசுவாசத்தின் நிர்ப்பந்தமான அவசியம்



2

"அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்" என்று 1 யோவான் 2:6 கூறுவதைக் கேளுங்கள். அப்படியானால், இயேசு எவ்வாறு நடந்தார்? என்பதே இப்போது நம் கேள்வியாய் இருக்கிறது! அவர், கொஞ்ச நேரம் மாத்திரம் வெற்றியின் ஜீவியத்தில் நடந்தாரா? அல்லது அதிக நேரமா? அல்லது **எல்லா நேரமும்** வெற்றியின் ஜீவியத்தில் நடந்தாரா? அதற்கான பதிலை நாம் யாவருமே அறிந்திருக்கிறோம். ஆம்! "எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் **ஒருபோதும்** பாவம் இல்லாதவராய் இருந்தார்" (எபிரெயர் 4:15) என்றே வேதம் விடையளிக்கிறது.

இப்போது நாமும் இயேசு நடந்தது போலவே நடப்பதற்கு அழைக்கப்படுகிறோம். இவ்வாறு இயேசுவைப்போலவே நடந்து ஜீவிப்பது, இப்பூமியில் சாத்தியமா? என நாம் கேட்கலாம். ஒரு காரியத்தை நம்மால் செயல்படுத்த முடியாது என்று தேவன் அறிந்திருந்தால் அதைச் செய்யும்படி அவர் சொல்லுவாரா? இல்லவேயில்லை. இவ்வுலகப் பிதாக்கள்கூட தங்கள் பிள்ளைகளுக்கு "சாத்தியமற்ற பாரத்தை" சுமத்துவது இல்லையே! அவ்வாறு இருக்க, நம் பரமபிதா நிச்சயம் அதிக பாரத்தை நம்மீது சுமத்தவேமாட்டார்!!

புதிய ஏற்பாட்டில், மத்தேயு 13:58-ம் வசனம் மிகவும் துக்ககரமான வார்த்தையாய் எழுதப்பட்டிருப்பதை காண்கிறோம்: ஆம், "அவர்களுடைய **அவிசுவாசத்தின்** நிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்கள் செய்யவில்லை" என்றும், இதற்கு இணையாக "அவர் வேறொரு அற்புதமும் செய்யக்கூடாமல்" என்று மாற்கு

6:5-ம் வசனத்திலும் வாசிக்கிறோம். இயேசுவோ, தனது சொந்த ஊர் ஜனங்களுக்காக பெரிய காரியங்களைச் செய்திட விரும்பினார். ஆனால், ஜனங்களின் அவிசுவாசமோ அவரைத் தடைசெய்து மட்டுப்படுத்திவிட்டது! பார்த்தீர்களா, தேவன் நமக்காகச் செய்திட விரும்பியதைச் செய்யக்கூடாமல் "அவிசுவாசம்" சர்வ வல்லமையுள்ள தேவனின் கரங்களைக் கட்டிப்போடுகிறது!

தேவன் செயல்பட விரும்பியும், உங்கள் அவிசுவாசத்தினிமித்தம் அவரால் செயல்பட முடியாத அற்புதங்கள் உங்கள் வாழ்க்கையில் இருந்திருக்குமோ என்றே நான் வியக்கிறேன்! கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக, நம்மில் யாரேனும் "இதோ, நான் உன் வாழ்க்கையில், உன் மூலமாக செயல்படுத்த விரும்பிய கிரியைகளை உன் அவிசுவாசத்தினிமித்தமே என்னால் செயல்படுத்த முடியாமல் போயிற்று" என தேவன் கூறுவதைக் கேட்கும் பரிதாப நிலையாகி விடுமோ? எனவும் அஞ்சுகிறேன்! இந்த உண்மைகளை நம் வாழ்வின் இறுதிக்கட்டத்தில் புரிந்துகொள்ளும்போது, நம் இருதயத்தின் துக்கம்தான் எவ்வளவு அதிகமாய் இருக்கும்! **இப்போதே** இவைகளைப் பற்றி சிந்திப்பது எவ்வளவு நல்லது!!

என்னுடைய, மறுபடியும் பிறந்த ஆரம்பக் கிறிஸ்தவ வருடங்களை, வேத ஆராய்ச்சிக்கு முக்கியப் பிரதானம் கொடுக்கும் சபைகளில் செலவழித்தேன். ஒரு நோக்காய் பார்க்கும்போது, அந்நாட்களுக்காக நான் ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். ஏனெனில், நான் தேவ வசனத்தில் நல்ல அடிப்படை அறிவைப் பெறுவதற்கு அவ்வித வேத ஆராய்ச்சி மிகவும் உதவியாய் இருந்தது. "ஆனால்" அநேகமாய் அவையாவும் மூளை அறிவுதான். கிட்டத்தட்ட "**பரிசுத்தாவியின் வெளிப்பாடு**" கொஞ்சம்கூட இல்லை! ஏனெனில் அச்சபையோர் பரிசுத்தாவியின் ஊழியத்தை அதிகமாய் விசுவாசிக்க மாட்டார்கள். பள்ளியில், மாணவர்கள் இரசாயன பாடத்தைப் படிப்பது போலவே நாங்கள் வேதாகமத்தைப் படித்தோம். 'பழைய ஏற்பாட்டின் மாதிரி' முதலானவைகளின் அர்த்தங்களைக் கண்டறிந்தோம். ஆனால் நாங்களோ எங்கள் வாழ்க்கையில் பாவத்தினால் தொடர்ச்சியாக தோற்கடிக்கப்பட்டிருந்தோம்!!

***தேவன் என்னுடைய பாவங்களை மன்னித்துவிட்டார் என்பதை நன்கு அறிந்திருந்தேன். ஆனால் பரிதாபம், இதைவிட மேலானதொன்றின் மேல் எனக்குக் கொஞ்சமும் விசுவாசம் இருந்தது இல்லை!!***

நான் தேவனுடைய வார்த்தையில் பரிசுத்தாவி அபிஷேகத்தின் சத்தியத்தைக் கண்டபோது, அதற்காக தேவனைத் தேட ஆரம்பித்தேன். இங்குதான் எனக்குப் பெரிய பிரச்சனை உண்டானது. ஆம், என்னால் கொஞ்சம்கூட விசுவாசிக்க முடியவில்லை. நான் உபவாசித்து, ஜெபித்து, எந்த விலைக்கிரயமும் செலுத்தத் தயாராய் இருந்தேன். ஆனால்,

*விசுவாசத்தால் தேவனுடைய வாக்குத்தத்தத்தை சுதந்தரிக்க மிகவும் கடினமாய் இருந்ததை நான் கண்டுகொண்டேன். ஒருநாள் என்னோடு ஜெபித்துக் கொண்டிருந்த ஒரு சகோதரன், நான் "அவிசுவாசக்கட்டில்" இருப்பதாகக் கூறினார். அவர் எனக்கு விசுவாச வார்த்தைகளைக்கூறி, அநேக ஆண்டுகளான* "**அவிசுவாச அடிமைத்தனத்தை**" *விடுவித்து, அதிகாரம் நிறைந்த ஓர் ஜெபத்தை செய்தார். "உடனடியாக" நான் விசுவாசித்துப் பெற்றுக்கொள்ள முடிந்ததைக் கண்டுகொண்டேன். ஆம், நான் ஆவியின் நிறைவை விசுவாசத்தில் பெற்றுக்கொண்டேன்! இதைத் தொடர்ந்து, அந்நியபாஷை வரத்தையும் பெற்றுக் கொண்டேன்!! அது ஏற்கனவே நான் விசுவாசத்தில் பெற்றுக் கொண்ட பரிசுத்தாவியின் நிறைவை உறுதிபடுத்துவதாகவே இருந்தது!!*

*இப்போது, பல ஆண்டுகளாக நான் போராடிய அவ்வருடங்களைத் திரும்பிப் பார்க்கும்போது, "அவிசுவாசமே" எனக்குப் பெருந்தடையாய் இருந்தது என்பதைத் தெளிவாய் காண்கிறேன்!*

*இதே விசுவாச அடிப்படையில்தான் நாம் பாவத்தின்மேல் பூரண வெற்றியான வாழ்விற்குள் பிரவேசிக்க முடியும். நாம் வாஞ்சையோடு உபவாசித்து ஜெபிக்கலாம். "இருப்பினும்" நாம் ஒரு வளர்ச்சியையும் சாதித்துவிட முடியாது. . எதுவரை? . .***தேவனால் கூடும்....** *அவர், இவ்வெற்றி யுள்ள வாழ்விற்குள் நடத்துவார் என்று நாம் விசுவாசிக்கும் வரை!*

*நீங்கள், விசுவாசமில்லாமல் தேவனிடமிருந்து ஒன்றையும் பெற்றுக் கொள்ள முடியாது என்பதை சாத்தான் நன்கு அறிவான். அப்படியானால் உங்கள் இருதயத்தை எவ்வளவாய் அவிசுவாசத்தால் நிறைப்பதற்கு அவன் முயற்சி செய்வான் என்பதை சற்று எண்ணிப் பாருங்கள்! அவிசுவாசமானது, பொய் சொல்லுதல் மற்றும் விபச்சாரம் செய்தலைவிட பயங்கர அபாயம் நிறைந்தது. ஏனெனில், பிறவற்றை நாம் பாவங்கள் என்று எளிதில் கண்டுகொள்ள முடியும். ஆனால் அவிசுவாசம் அப்படியல்லவே! அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம், ஜீவனுள்ள தேவனைவிட்டே விலகுவதற்குக் காரணமாகிவிட முடியும் என்று எபிரெயர் 3:12-ம் வசனம் நம்மை எச்சரிக்கிறது. ஆம், அவிசுவாசமே எல்லாப் பாவங்களுக்கும் வேர்!! பின்வரும் அதிகாரங்களை நாம் வாசிக்கும்போது இது இன்னமும் தெளிவுபடும்.*

*"நாம் கிருபைக்கு கீழ்ப்பட்டிருந்தால் பாவம் நம்மை ஆளுகை செய்யவே முடியாது" என்று ரோமர் 6:14-ம் வசனம் திட்டமாய் கூறுகிறது. மிக வெளிப்படையான இவ்வசனத்தை ஒரு சிறுபிள்ளை கூட புரிந்துகொள்ள முடியுமே! இவ்வாறெல்லாம் இருந்தும், அநேக விசுவாசிகள்* **பாவத்தின்மேல் பூரண வெற்றியுள்ள வாழ்க்கை** *வாழமுடியும் என்ற சத்தியத்தை விசுவாசிக்கவில்லையே!!*

*நீங்கள் வெற்றி வாழ்க்கை வாழவே தேவன் விரும்புகின்றார்!*

*உங்கள் சிந்தனை ஜீவியம் எவ்வளவு அருவருப்பாய் இருந்தால் என்ன? எவ்வளவோ காலம் நீங்கள் கோபத்தால் தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் என்ன? இவை எல்லாம் ஒரு பொருட்டல்ல! தேவன் உங்களை நூற்றுக்கு நூறு விடுதலை செய்து சுத்த இருதயத்தை உங்களுக்கு கொடுத்திட முடியும்! ஆனால் இவையெல்லாவற்றையும், உங்களிடம் விசுவாசம் இல்லையென்றால், அவரால் ஒன்றும் செய்யவே முடியாது!*

*நாம் இருதயத்தில் விசுவாசிப்பதை, வாயினால் அறிக்கை செய்ய வேண்டும் என்று வேதம் கூறுகிறது (ரோமர் 10:10). இது ஓர் மிக முக்கியமான கோட்பாடாகும்! ஏனெனில், வாயினால் அறிக்கை செய்வதின் மூலமாகவே நம் இருதயத்தின் விசுவாசத்தை நாம் பிரதிபலித்திட முடியும். இதன் விளைவுதான், எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுதலையாகும் இரட்சிப்பிற்குள் நம்மை நடத்துகிறது. எனவே, இப்போது சாத்தானை நோக்கி நம் சாட்சியின் வார்த்தைகளை அறிக்கை செய்து முழங்குவோமா?* "**சாத்தானே! தேவன் என்னைப் பாவத்தின்மேல் பூரண வெற்றியான வாழ்விற்குள் நடத்தப் போகிறார் என்று நான் விசுவாசிக்கிறேன்!!**" *ஆம், இவ்வாறுதான் நாம் சாத்தானை ஜெயித்திட முடியும் (வெளி.12:11). வெற்றி உங்கள் வாழ்வில் நிஜமாய் வந்துவிடும்வரை, நீங்கள் வீழ்ச்சியடையும் நேரமெல்லாம், இந்த அறிக்கையை செய்துகொண்டே இருங்கள். ஜெயம் சொற்ப நாட்களில் வந்துவிடாது! எனவே கொஞ்சமும் அதைரியம் அடைந்துவிடாதீர்கள். . . தேவன் உங்கள் வாயின் அறிக்கையை நிச்சயம் கனப்படுத்துவார்!!*

# தேவனுடைய வார்த்தைக்கு ஏன் ‘பய பக்தி’ இல்லை?



3

அநேக விசுவாசிகளிடம் தேவனுடைய வார்த்தையை மிகவும் சாதாரணமாகவே எடுக்கும் தீயப்பழக்கம் உள்ளது! இயேசு சொன்ன வார்த்தைகளைக் கவனித்திருக்கிறீர்களா? “மனுஷர் பேசும் **வீணான வார்த்தைகள் யாவையும்** குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கு ஒப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே ‘நீதிமான்’ என்று தீர்க்கப்படுவாய். அல்லது உன் வார்த்தைகளினாலே ‘குற்றவாளி’ என்று தீர்க்கப்படுவாய் என்றல்லவா மத்தேயு 12:36,37-ம் வசனங்களில் இயேசு கூறினார். இவ்வசனத்தை அனேக விசுவாசிகள் எழுத்தின் பிரகாரமாய்கூட உண்மையென விசுவாசிப்பது இல்லை என்றே யூகிக்கிறேன். அப்படி “விசுவாசித்திருந்தால்” இன்று கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் புறங்கூறுதல், தூற்றிப்பேசுதல், பொல்லாங்கு உரைத்தல் மற்றும் கோபமான வசைச்சொற்கள் இத்தனை அதிகமாய் காணப்பட்டிருக்காதே! நாம் தேவனுடைய வார்த்தையை **பயபக்தியுடன் பாவித்திருந்தால்** நம்முடைய சம்பாஷணைகளில் வீண் வார்த்தைகளைக் களைந்து அகற்றுவதற்கு தீவிரப்பட்டிருப்போமே!!

நாம் **நம்முடைய வார்த்தைகளினாலும்** நீதிமான்களாய் தீர்க்கப்படுவோம் என்றும் இயேசு கூறியதைக் கவனியுங்கள்! விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்பதை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம். இருப்பினும், கிரியை இல்லாத விசுவாசமோ செத்தது! மேற்கண்ட ஒப்பீட்டின்படி, நம்முடைய சம்பாஷணையை சுத்திகரிக்காத விசுவாசமும் செத்த விசுவாசமே! நீங்கள், கடந்த மூன்று மாதங்களில் உங்கள்

வீட்டில், உங்கள் அலுவலகத்தில், உங்கள் கணவனிடத்தில், மனைவியினிடத்தில், பிள்ளைகளிடத்தில் மற்றும் வேலைக்காரர் களிடத்தில் பேசிய (அல்லது எழுதிய) வார்த்தைகளை யெல்லாம் எண்ணிப்பாருங்கள். ஒரு டேப்ரிக்கார்டரில் பதிவு செய்யப்பட்ட இந்த உங்களின் சம்பாஷணைகள், நீங்கள் இவ்வுலகத்திற்கு முற்றிலும் வித்தியாசமான **நீதிமான்களாக்கப்பட்ட தேவனுடைய பிள்ளை** என்று நிரூபிக்க முடியுமா? அல்லது உங்கள் வார்த்தைகள் அவிசுவாசிகளின் சம்பாஷணைக்கு ஒப்பாகவே இருக்கிறதா?

இன்று அனேக விசுவாசிகளின் சம்பாஷணை தூய்மை அற்றதாகவே இருக்கிறது. ஏன் தெரியுமா? இவர்கள் இயேசுவின் வார்த்தைகளைச் சிறிதேனும்கூட 'சீரியஸாக' பாவிக்கவில்லை! இதை தெளிவாய் சொல்ல வேண்டுமென்றால், "இவர்கள் தேவனுக்குப் பயப்படவே இல்லை!" இவர்கள் தேவனுக்குப் பயப்படுவதைக் காட்டிலும் மனுஷர்களுக்கே அதிகம் பயப்படுகிறார்கள். நாம் தேவனுடைய வார்த்தையை 'சீரியஸாகப்' பாவித்துப் பழகவில்லை யென்றால், நம் வாழ்க்கையில் நாம் ஆவிக்குரிய வளர்ச்சி அடைவோம் என்பது ஓர் நப்பாசையான நம்பிக்கையாகவே போய்விடும்!

ஒருவன் தன் நாவை அடக்காவிட்டால் அவனுடைய தேவபக்தி அனைத்தும் வீணாய் இருக்கும் என்று யாக்கோபு 1:26-ம் வசனம் கூறுவது உண்மையிலும் உண்மை. ஏனெனில், நம் இருதயம் 'எதினால்' நிறைந்திருக்கிறதோ அதுவே பொங்கி வரும் வார்த்தைகளாகின்றன என்று இயேசு குறிப்பிட்டார் (மத்தேயு 12:34). நம் ஆவிக்குரிய நிலையை அறிந்துகொள்ள உதவும் பல அடையாளங்களில், "நாம் எவ்வாறு நாக்கைப் பிரயோகப்படுத்துகிறோம்" என்பது ஓர் மிகத் தெளிவான அடையாளம் ஆகும்!

இதோ வெற்றியின் இரகசியங்களில் ஒன்றான மேலும் ஓர் இரகசியத்தைக் கேளுங்கள்: "தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையையும் 'சீரியஸாகப்' பாவியுங்கள்!" என்பதே அந்த இரகசியம்!!

# 4



மனிதனிடம் தேவன் எதிர்பார்ப்பதெல்லாம், அவருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிவதேயாகும். **பழைய உடன்படிக்கையில்** இஸ்ரவேலர்கள் கீழ்ப்படியும்படி அழைக்கப்பட்டிருந்தும், அவர்களால் அது முடியவில்லை என்பதைக் கண்டுகொண்டார்கள். **புதிய உடன்படிக்கையிலோ** தேவன் தன்னுடைய பிரமாணங்களை நம்முடைய மனதில் வைத்து கொடுத்திருக்கிறபடியால், இப்போது நாம் அவருக்குக் கீழ்ப்படிவது மாத்திரமல்ல, அவருக்குக் கீழ்ப்படிய மனதார "பிரியமும்" கொள்ளுகிறோம் (எசேக்கியேல் 36:27). ஆம்! தேவனுடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிவதினால் மாத்திரமே நாம் அவரோடு நேசமுள்ள ஐக்கியம் கொண்டிட முடியும்.

இன்று, கீழ்ப்படிதல் இன்னதென்றே அனேக விசுவாசிகள் அறியாமல் இருக்கிறார்கள். கீழ்ப்படிதல் ஏதோ "பழைய உடன்படிக்கையின் தேவை!" என்று எண்ணுமளவிற்கு, அனேக விசுவாசிகள் தேவ கிருபையைத் தவறாய் புரிந்து கொண்டிருக்கிறார்கள்! இதன் விளைவு? தேவனுடைய கற்பனைகள் மனுஷனுக்கு பாரமானவைகள் என்ற முடிவிற்கே வந்துவிட்டார்கள்! இது சாத்தானின் மிக கொடிய வஞ்சகம்! தேவனுடைய அன்பை அறியாத அறியாமையே இப்பரிதாப விளைவிற்கு காரணமாகும்!!

எல்லா தேவனுடைய கற்பனைகளும், நம்முடைய நன்மைக்காகவும், நம்மை அடிமைத்தன கட்டிலிருந்து விடுதலை செய்யவுமே அருளப்பட்டிருக்கிறது. அவரது கற்பனைகள் அனைத்தும், நம்மைப் பூரண அன்பால் நேசிக்கும் தேவனின் இருதயத்திலிருந்தே

*ஊற்றெடுத்துப் பிறந்தவைகள்! உபாகமம் 33:2,3 வசனங்கள், தேவன் இஸ்ரவேல் ஜனங்களக்கு சீனாய் மலையில் பிரமாணங்களைக் கொடுத்ததைப்பற்றிக் கூறும்போது, "அக்கினிமயமான பிரமாணம் அவருடைய வலது கரத்திலிருந்து புறப்பட்டது. மெய்யாகவே (சந்தேகத்திற்கு இடமில்லாமல்)* **அவர் ஜனங்களைச் சிநேகிக்கிறார்**" *என நேர்த்தியாய் தெளிவுப்படுத்துகிறது.*

***ஆம்! தேவன் நமக்கு கற்பனைகளைக் கொடுத்தது, அவர் நம்மீது வைத்த அளவற்ற அன்பை நிரூபிக்கும் ஓர் நிரூபணமேயாகும்.***

*தேவனுடைய சில பிரமாணங்களை நிறைவேற்றுவதற்கு நம் ஜீவியத்தில் அதிகமான "சுயவெறுப்பு" தேவைப்படலாம். ஆனால் நீண்ட வாழ்க்கைப் பயணத்திற்குப் பின்பு, இவை அனைத்தும் நம்முடைய நன்மைக்காகவே என்று நாம் கண்டுகொள்ள முடியும். ஓர்* **தகப்பன்** *தன்னுடைய பிள்ளைகளுக்கு கட்டளைகள் கொடுப்பது அவர்களுக்கு உதவி செய்யவே அல்லாமல், அவர்களைப் பாரப்படுத்தவோ அல்லது அவர்களுக்கு துன்பம் தரவோ அல்ல! இவ்விதமாகவே தேவனும் நமக்கு கட்டளைகளைக் கொடுக்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். விசுவாசம் கொள்வதென்பது "ஓர் பூரண அன்புகொண்ட" தேவனிடம் வைத்திடும் விசுவாசமேயாகும். இப்படிப்பட்ட விசுவாசம் நமக்கு இருக்குமென்றால், நாம் தேவனுடைய பிரமாணங்களை எந்த விலைக்கிரயம் ஆனாலும் பெரு மகிழ்ச்சியுடன் நிறைவேற்றிவிடுவோம்!*

*இங்குதான் நம்முடைய அதிகமான தோல்வியின் காரணம் விளங்குகிறது. ஆம், பிசாசானவன் நம்மில் அநேகரை, தேவனுடைய கற்பனைகள் அப்படியொன்றும் முக்கியம் இல்லை என்றோ அல்லது பாரமுள்ளவைகள் என்றோ நம்ப வைத்திருக்கிறான். ஒன்றைச் செய்யும்படி ஏன் நம்மை தேவன் அழைக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ளாவிட்டால், அவருடைய கற்பனைகளை நாம் மனப்பூர்வமாய் கைக்கொண்டிட முடியாது. ஒருநாள், கொஞ்சம் முதிர்ச்சியில் வளரும்போது தேவனுடைய கற்பனைகளின் நோக்கத்தை "நாமே" புரிந்துகொள்ள முடியும்!*

*சிறுபிள்ளைகள் கட்டாயமாய் பள்ளிக்கு அனுப்பப்படும்போது, பெற்றோர்கள் தங்களை ஏன் வீட்டிலேயே தங்கி விளையாட அனுமதிப்பதில்லை என்பதை அப்பிள்ளைகள் புரிந்துகொள்ள மாட்டார்கள். பெற்றோர்கள் தங்களிடம் மிகவும் கடினமாக இருக்கிறார்கள் என்றுகூட அப்பிள்ளைகள் எண்ணலாம்! ஆனால், பிள்ளைகளின்மேல் வைத்த அன்பினாலன்றோ பெற்றோர்கள் அவர்களைக் கல்விகற்கும்படி கட்டாயப்படுத்துகிறார்கள்! இச்சிறு பிள்ளைகளைப் போலவே நாமும் தேவனுடைய வழிகளை அடிக்கடி புரிந்துகொள்ளுவதில்லை. நாம் அவருடைய அன்பில் நிலையான*

விசுவாசம் வைத்திருப்போமென்றால், எந்தக் கேள்வியும் கேட்காமல் அவருடைய எல்லா வார்த்தைகளுக்கும் கீழ்ப்படிந்து, அவர் நடப்பிக்கும் எல்லா கிரியைகளுக்கும் நம்மை ஒப்புக் கொடுத்திருப்போமே!!

உதாரணமாக, நாம் **துன்பங்கள்** அடைவதைக் குறித்து பார்ப்போம். நாஸ்திகன் நம்மைப் பார்த்து, "ஓர் அன்புள்ள தெய்வம், உங்களை எப்படி இவ்வளவு துன்பங்களைக் கடந்து வர அனுமதிப்பார்?" என்று கேட்கலாம். ஆவிக்குரிய கல்வித் திட்டத்தில் துன்பமும் ஒரு பகுதி என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியாது. ஆம்! துன்பத்தின் மூலமாகவே தேவன் தன்னுடைய பிள்ளைகளை முதிர்ச்சி பெற நடத்துகிறார். நீங்கள் துன்பம் அடைவதற்கு அதிகமான சந்தர்ப்பம் இல்லாதிருந்தால், நீங்கள் வளர்ச்சியும் அடையமாட்டீர்கள் என்பதுதான் பொருள்!

ஒருவேளை, கடந்தமுறை கொஞ்ச துன்பத்திலேயே நீங்கள் முறுமுறுத்து குறை கூறியதால், உங்கள் சொந்த வழியிலேயே செல்வதற்கு தேவன் அனுமதித்திருப்பார். "இப்படி" தேவன் உங்களை ஓர் அறையில் ஒதுக்கி வைப்பது, மிகவும் துக்கம் நிறைந்ததாகும். இவ்வாறு ஓர் அறையில் தேவனால் ஒதுக்கப்படுவதைவிட என் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் நான் பாடுகளுக்குள் பிரவேசிப்பதே பாக்கியம்!

தேவன் நம்மைத் துன்பத்தின் பாதையில் நடத்தும்போது, மற்றவர்களோடு நம்மை ஒப்பிடுவது மதியீனமாகும். எப்படியென்றால், உங்கள் பிள்ளைகள், "தாங்கள் மாத்திரம் பள்ளிக்குச் செல்லும்போது, சேரியில் உள்ள பிள்ளைகள் நாள் முழுவதும் மண்மேட்டில் விளையாடுகிறார்களே!" என வியப்பதற்கு ஒப்பாகும். தேவன் நம்மோடு இடைப்படும் கிரியை யாவும் அவர் நம்மீது வைத்த பூரண அன்பினாலேயே கிரியை நடப்பிக்கிறார். நாம் சந்தோஷமாய் இருக்கவே தேவன் விரும்புகிறார்... ஆனால் நுரைபோன்ற மேற்பூச்சான இவ்வுலக சந்தோஷம் அல்ல. . . மாறாக, பரிசுத்த ஜீவியத்தின் மூலமாய் வரும் உண்மையாய் நிலைத்து நிற்கும் சந்தோஷம்! நாம் பரிசுத்தம் அடைவதற்குத் துன்பத்தைக் கடந்து வருவதல்லாமல் வேறு வழியே இல்லை என வேதம் திட்டமாய் கூறுகிறது (எபிரெயர் 12:10).

இப்பூமியில் நடந்த எல்லோரைக் காட்டிலும் **மகிழ்ச்சி** நிறைந்த மனிதர் இயேசு ஒருவரே! இருப்பினும் எல்லோரைக் காட்டிலும், அதிகமாய் துன்பம் அடைந்ததும் அவர் ஒருவரே! மேலும் அந்த மகிழ்ச்சி, பிதாவின் சித்தம் செய்ததால் வந்ததே அல்லாமல், மிக எளிதானதொரு ஜீவியத்தால் வந்ததல்ல. தன் பிதா பூரண அன்புள்ளவர் என்பதை அவர் அறிந்திருந்தார். எனவேதான், பிதா அனுப்பிய எல்லா வழிகளுக்கும் தன்னைப் பெருமகிழ்ச்சியுடன் ஒப்புக்கொடுத்தார்! அவரது முழுமையான வெற்றி வாழ்க்கையின் இரகசியமும் இதுதான்!!

# இயேசுவை நேசித்ததுபோல் நம்மை நேசிக்கும் தேவன்

நம்முடைய எல்லா ஆவிக்குரிய பிரச்சனைகளுக்கும் மூல காரணம், தேவனை ஓர் அன்புள்ள தகப்பனாகவும்; சர்வத்தையும் ஆளும் வல்ல கர்த்தராகவும் நாம் இன்னமும் அறியாமல் இருப்பதேயாகும்.

என் கிறிஸ்தவ வாழ்க்கையை புரட்சியான மாற்றம் செய்த ஓர் சத்தியம் உண்டு. அதென்னவெளில், "பிதா, இயேசுவை நேசித்ததுபோலவே நம்மையும் நேசிக்கிறார்" (யோவான் 17:23) என்று இயேசு நமக்கு அருளிய உன்னத வெளிப்பாடேயாகும். மேலும், இவ்விதமாய் பிதா நம்மை நேசிக்கும் ஆச்சரியமான நேசத்தை இவ்வுலகம் அறிந்துகொள்ள வேண்டு மென்றும் இயேசு ஜெபித்தார். ஆனால் இவ்வுலகம் அவ்வாறு அறிந்துகொள்ளுமுன், இச்சத்தியம் "முதலாவது" நம் ஜீவியத்தில் நிஜமாய் மாறவேண்டுமே!



பொதுவாய் எல்லா கிறிஸ்தவர்களுமே, பரலோகத்தில் அன்புள்ள பிதா ஒருவர் இருக்கிறார் என்பதை எழுத்தளவில் விசுவாசிக்கின்றனர். ஆனால் இவர்கள் அடிக்கடி கவலையுற்று, பதட்டம் அடைந்து, ஓர் பாதுகாப்பற்ற பயத்துடன் வாழும் வாழ்க்கை, இவர்கள் தங்கள் இருதயத்தின் ஆழத்திலிருந்து இச்சத்தியத்தை விசுவாசிக்கவில்லை என்பதையே நிரூபிக்கிறது. இருப்பினும், இயேசுவை தேவன் எவ்வளவு நேசித்தாரோ அதே அளவு நம்மையும் நேசிக்கிறார் என்ற **துணிவான விசுவாசம்** கொள்ள கொஞ்சம் பேர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்! இவ்வுண்மையை இயேசு வெளிப்படுத்தியிராவிட்டால், நம்மில் ஒருவரும் இவ்வித துணிவான விசுவாசத்திற்குரிய பாக்கியத்தை அடைந்திருக்க முடியாது!!

5

*இம்மாபெரும் சத்தியத்தைக் காணும்படி உங்கள் கண்கள் மாத்திரம் திறக்கப்பட்டுவிட்டால் உங்கள் வாழ்க்கையின் முழு அணுகுமுறையையும் இச்சத்தியம் மாற்றிவிடும்! மாத்திரமல்ல, உங்கள் வாழ்க்கையில் உள்ள எல்லா முறுமுறுப்பும், மனச்சோர்வும், நம்பிக்கையின்மையும் அழிந்து ஒழிந்துபோகும்! இப்படியெல்லாம் நடப்பது சாத்தியமென்று நான் அறிந்திருக்கிறேன். ஏனெனில், இவையாவும் என் வாழ்க்கையில் நிறைவேறியிருக்கிறதே!!*

*அநேக ஆண்டுகள் நான்* **மனச்சோர்விற்கு** *அடிமையாக வாழ்ந்து தோற்கடிக்கப்பட்டவன். இவ்வாறு நான் இருந்தது பிதாவின் சித்தம் இல்லைதான், இருந்தாலும் நானோ அதிலிருந்து விடுதலையாக முடியாமல் தவித்தேன். என்ன விந்தை! "பிதா இயேசுவை நேசித்தது போலவே என்னையும் நேசிக்கிறார்" என்ற சத்தியத்தைக் காண என் கண்கள் திறக்கப்பட்ட 'அந்த நாளிலிருந்து' எல்லாம் அடியோடு மாறிவிட்டது!! என் வாழ்வின் பாதைக்குள் பிரவேசிக்கும் ஒவ்வொன்றும், என் அன்பின் பிதாவின் கையிலிருந்தே வருகின்றன என்பதை இப்போது தெளிவாய் காண்கிறேன். அவர் என்னைக் கண்ணின் மணிபோல் காக்கிறதைக் கண்டுகொண்டபடியால், இப்போது என் வாழ்வின் எந்த சூழ்நிலையும், என்னை முறுமுறுக்கவோ, மனச்சோர்வடையவோ செய்திட முடிவதில்லை!! பவுல் கூறிய* **"போதுமென்ற மனதுடனே இருக்கும்"** *இரகசியத்தையும் கற்றுக்கொண்டு என்னுடைய எல்லா சூழ்நிலைகளிலேயும் தேவனைத் துதிக்கிறேன் (பிலிப்பியர் 4:4, 11; 1தெச. 5:18). ஆ! இப்போது, "தேவன் இயேசுவை நேசித்தது போலவே என்னையும் நேசிக்கிறார்" என்ற சத்தியம் என் வாழ்வில் அசைக்க முடியாத அஸ்திவாரமாய் ஆகிவிட்டது!!*

*நீங்கள் ஏதோ போதுமான அளவு உபவாசித்து ஜெபிக்காத காரணத்தால், வெற்றியின் வாழ்விற்குள் பிரவேசிக்கவில்லை என்று எண்ணிக்கொள்ளாதீர்கள். ஜெயமானது சுயமுயற்சியால் அல்ல,* **விசுவாசத்தினாலேயே** *வருகிறது. "எதை விசுவாசிப்பதினால்?" என்று நீங்கள் கேட்கலாம். ஆம்! என்னைப் பூரணமாய் நேசிக்கும் தேவனுடைய அன்பை விசுவாசிப்பதினாலேயே!!*

*இன்று அநேகர், "நீ சரியாய் உபவாசிக்கவில்லை, ஜெபம் அதிகமாய் செய்யவில்லை, சாட்சி போதுமான அளவு கூறவில்லை. . ." என்று ஓயாது கூறும் சாத்தானுடைய குற்றச்சாட்டின் கீழ் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் தொடர்ச்சியாக இப்படிப்பட்ட எண்ணத்தால் தாக்கப்பட்டு உபவாசம், ஜெபம் போன்ற முடிவற்ற இக்கிரியைகளை மெஷின் போன்று செய்து, திரளான* **"செத்த கிரியைகளுக்கு"** *காரணராகிவிடுகிறார்கள். உங்களுடைய சுய-கட்டுப்பாடு, உபவாசம், ஜெபம், தசமபாகம் தருதல், சாட்சி சொல்லுதல் ஆகிய எல்லாம் உண்மையான "அன்பில்" பிறக்கவில்லையென்றால் இவையனைத்தும் செத்த கிரியைகளாகிவிடும் என்று அறிந்திருக்கிறீர்களா? ஆம், "நீங்கள்"*

*முதலாவது தேவனுடைய அன்பின் பாதுகாப்பில் இல்லையென்றால் இவையாவும்* **அன்பில் உற்பவிப்பதும்** *இயலாது!!*

*நாம் 'அன்பில்' வேரூன்றி நிலைபெற்றிருக்க வேண்டும் என்றே வேதம் கூறுகிறது (எபேசியர் 3:16,17). ஏற்கனவே மனந்திரும்பி ஆவியில் அபிஷேகம் பெற்றிருந்த எபேசிய கிறிஸ்தவர்கள் "இன்னமும் பெறவேண்டும்" என பவுல் எவைகளுக்காக ஜெபித்தார்? அவர்கள் ஆவியினால்* **உள்ளான மனிதனில் பலப்படவேண்டும்** *என்றே ஜெபித்தார். எதற்காக பலப்பட வேண்டும்? அவர்கள்* **தேவனுடைய பரிபூரண அன்பில்** *வேரூன்றி நிலைபெற்று, அவ்வன்பின் நீளம் அகலம் உயரம் ஆழம் இன்னதென்று அறிந்துகொள்ளும்படியாக!! "இதற்குப் பிறகுதான்" கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்ட உதவும் வரங்களைக் குறித்து பவுல் பேசினார் (எபேசியர் 4:7-16). ஓர் கட்டிடத்தின் அஸ்திவாரத்தைப் போல - ஓர் மரத்தின் வேரைப்போல - நம்முடைய அடித்தளமானது, தேவனுடைய அன்பில் பூரண பாதுகாப்பை நாம் அடைந்திருக்க வேண்டும். அப்போது மாத்திரமே நம்முடைய ஊழியம் வல்லமை நிறைந்ததாய் இருந்திட முடியும்.*

*இதைத்தான், "இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தல்" என புதிய ஏற்பாடு விளம்புகிறது. "(நம்மீது தேவன் கொண்ட பூரண அன்பை) விசுவாசித்தவர்களாகி நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்" (எபிரெயர் 4:3) என்றே வாசிக்கிறோம். மேலும், இந்த இளைப்பாறுதலுக்குள், நம் முழு இருதயத்தோடும் நாம் பலவந்தம் செய்து பிரவேசிக்க வேண்டும் எனவும் வேதம் வலியுறுத்திக் கூறுகிறது (எபிரெயர் 4:11). இந்த இளைப்பாறுதலைக் கண்டடையாதவர்கள் மிக எளிதில் அலைக்கழிக்கப்பட்டு வீழ்ச்சியடைவார்கள்!*

*"என்னை யாரேனும் நேசிக்கமாட்டார்களா?" என்று ஏங்கி நிற்கும் ஜனங்களால் இவ்வுலகம் நிறைந்திருக்கிறது. அநேக கிறிஸ்தவர்களும், தாங்கள் நேசிக்கப்படும்படியாக சபைவிட்டு சபை செல்லுகிறார்கள்! சிலர் நண்பர்களிடமும், சிலர் திருமண உறவிலும் அவ்வன்பைத் தேடுகிறார்கள். ஆனால் பரிதாபம்! இவ்விதமாய்த் தேடுவதின் பிரதிபலன் ஏமாற்றத்திலேயே முடிவடைகிறது!! அனாதைகளைப் போல, இவ் ஆதாமின் பிள்ளைகள் பாதுகாப்பற்றவர்களாய் மீண்டும் மீண்டும் "சுய-அனுதாப நோயினால்" பீடிக்கப்படுகிறார்கள். இதில் வேதனை என்னவென்றால், மனந்திரும்பிய அநேகர்கூட, இன்னமும் இக்கொடிய பாதுகாப்பற்ற நிலையிலேயே இருக்கின்றனர்! இவ்வாறு இருக்க வேண்டியது நிச்சயமாய் அவசியமேயில்லை!!*

*இப்பிரச்சனைகளுக்கு சுவிசேஷம் அளிக்கும் விடை யாது? தேவனுடைய அன்பில் பாதுகாப்பைக் கண்டுகொள்வதுதான் இதற்கு நிரந்தரமான விடை! மறுபடியும் மறுபடியும், இயேசு தன் சீஷர்களுக்கு, அவர்களுடைய தலையின் மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிற*

தென்றும், கோடிக்கணக்கான பறவைகளைப் போஷிக்கிறவர், கோடிக்கணக்கான மலர்களை உடுத்துவிக்கிறவர் நிச்சயமாய் உங்களையும் பராமரித்துக் காப்பார் என்றும் உறுதிபட கூறினார். இவையெல்லாவற்றிற்கும் மேலாக, "தம்முடைய சொந்த குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" என்று ரோமர் 8:32-ம் வசனம் அறைகூவி முழங்குகிறது. ஆம், இயேசுவை தேவன் நேசித்துக் காத்தது போலவே நம்மையும் நேசித்துக் காத்திடுவார்!!

அநேக நேரங்களில், நம்முடைய சக நண்பர்களிடம் நாம் ஏமாற்றம் அடைய தேவன் அனுமதிக்கிறார். அதன் காரணம் என்னவெனில், இதன் மூலமாக நாம் மனிதர்களைச் சார்ந்து ஜீவிக்கும் ஜீவியத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும்படி கற்றுக்கொள்வதற்கே ஆகும். இப்படிப்பட்ட விக்கிரக ஆராதனையிலிருந்து (மனுஷர்களைச் சார்ந்திருப்பது விக்கிரக ஆராதனைக்கே ஒப்பாகும்) நம்மை விடுதலையாக்கி, அவரையே முற்றிலும் சார்ந்திருக்கும்படி நாம் கற்றுக்கொள்ளவே தேவன் விரும்புகிறார். காரியம் இவ்வாறாக இருப்பதால், நம்முடைய பல்வேறு சூழ்நிலைகளில் நாம் ஏமாற்றம் அடையும்படி தேவன் கிரியை செய்யும்போது அதனிமித்தம் நாம் அதைரியம் அடைந்துவிடவே கூடாது! இவை யாவும், நாம் தேவனை மாத்திரமே விசுவாசித்து **அவரைச் சார்ந்துகொள்ளும்** வாழ்க்கையைக் கற்றுக்கொள்ளும்படி, நம்மை தேவன் "மாம்ச புயத்தின் வலிமையிலிருந்து" பிரித்தெடுக்கும் செயலேயாகும்! **இயேசுவை தேவன் நேசித்தது போலவே என்னையும் நேசிக்கிறார்** என்ற சத்தியத்தில் உங்கள் பாதுகாப்பைக் கண்டுகொள்ள இனிமேலாவது கற்றுக்கொள்ளுங்கள்!!

கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் போட்டி, பொறாமைகள் இப்பாதுகாப்பின்மையின் நிலையிலிருந்தே உற்பவிக்கிறது! தேவன் தன்னை உருவாக்கிய விதத்திலும், தனக்கு அருளிய வரங்களிலும் திறமைகளிலும் "ஒரு பிழையும்" செய்துவிடவில்லை என்று விசுவாசித்து, **தேவனுடைய அன்பின் பாதுகாப்பில்** நிலைகொண்ட ஓர் மனிதன், ஒருபோதும் மற்றவரைக்குறித்து பொறாமைகொள்ளவோ அல்லது மற்றவரை முந்திக்கொள்ளும்படி போட்டியிடவோ மாட்டான். இப்பாதுகாப்பற்ற நிலையே இன்று விசுவாசிகளிடம் காணப்படும் எல்லா பிரச்சனைகளுக்கும் அடிப்படைக் காரணமாகும்.

சற்றே சிந்தியுங்கள்! **தேவனுடைய பூரண அன்பாகிய** இந்த ஒரு சத்தியத்தை மாத்திரம் காணும்படி உங்கள் கண்கள் திறக்கப்பட்டு விட்டால், உங்களின் எண்ணற்ற பிரச்சனைகள் தீர்க்கப்பட்டுவிடுமே!!

# ஒவ்வொரு பாடுகளிலும் தேவ நோக்கம் உண்டு



# 6

*நம் வாழ்க்கையில் குறுக்கிட தேவன் அனுமதிக்கும் ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் அவருடைய "மகிமையான நோக்கம்" ஒன்று உண்டு என நாம் கண்டுகொள்வோ மென்றால், அது எத்தனை பெரிய மகிழ்ச்சியான அற்புத வாழ்க்கை! அவர் நம்முடைய ஜெபங்களுக்கு "இல்லை" என்று பதிலுரைத்தாலும், அதுவும் அவரது பூரண அன்பின் இருதயத்தி லிருந்தன்றோ பிரவாகிக்கிறது!!*

*வனாந்திரத்தில் இஸ்ரவேல் ஜனங்களைக் கடிக்கும்படி தேவன் கொள்ளிவாய் சர்ப்பங்களை அனுப்பினாரே, அதுவும் அவரது அன்பின் கிரியை தானோ? (எண்.21:6). நிச்சயமாக அப்படித்தான்! ஏனெனில், இதன் மூலம்தான் தேவன் அவர்களை மனந்திரும்பும்படிச் செய்து, தான் அவர்களை ஆசீர்வதிக்கும்படி அவரிடம் அவர்களைத் திரும்பக் கொண்டுவர முடிந்தது! அவரோ அவர்களை ஆசீர்வதிக்க விரும்பினார். . . ஆனால், அவர்கள் மனந் திரும்பும்வரையில் அது அவரால் கூடாத காரியமாய் இருந்தது!!*

*"நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற திட்டங்களை நான் அறிவேன் என்று கர்த்தர் சொல்லு கிறார்;* **அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக் கேதுவான நினைவுகளே** *- அது உங்களுக்கு எதிர்கால முடிவையும் நம்பிக்கையையும் கொடுக்கும்" என்றே கர்த்தர் உரைக்கிறார்! (எரேமியா 29:11).*

*இவ்வுலகமானது, நோய் நொடிகளாலும், விஷப்பாம்புகளாலும் நிறைந்த பாதுகாப்பற்ற இடமாய் தேவன் அனுமதித்ததற்கு ஓர் காரணம் உண்டு! அதென்ன வெனில், ஜனங்கள் தங்கள் துன்பத்தில் தன்னிடம் திரும்பவும், அவர் அவர்களை ஆசீர்வதிக் கவுமே ஆகும்!!*

*எனவே, சாத்தான் கொண்டுவரும் எல்லாத் தீமையானவைகளையும் தேவன் எவ்வாறு தன் நோக்கம் நிறைவேறும்படி கிரியை செய்ய உபயோகிக்கிறார் என்பதை இப்போது நாம் காணமுடிகிறது! நித்தியத்திற்குள் பிரவேசித்தவர்களை நாம் கண்டு, பாம்புக் கடியையும்; பொருளாதார நெருக்கடியையும்; புற்றுநோய் போன்றவற்றையும் தேவன் எவ்வாறு உபயோகித்து அவர்களைப் பாவத்திலிருந்து விலக்கி அவருடைய பிள்ளையாய் மாறும்படிச் செய்தார் என்று கேட்கும்போது, நாம் இச்சத்தியத்தைப் பூரணமாய் அறிந்து கொள்ளுவோம்! தேவன் எவ்வாறு பாடுகளை உபயோகித்துத் தன் பிள்ளைகளைப் பரிசுத்தப்படுத்தவும், அவருடைய சுபாவத்தை அடையவும் செய்தார் என்றும் அன்று கேட்டறிவோம்!!*

*இன்று, நாம் பூமியில் அறிந்துகொள்ள முடியாதவைகளை அந்நாளில் அறிந்து கர்த்தரை ஸ்தோத்தரிக்கப் போகிறோம்! இருப்பினும், விசுவாசிக்கும் ஓர் தேவ மனிதன் அந்நாளுக்காக காத்திருக்க வேண்டியதில்லை. அவன், தேவனுடைய ஞானத்தையும்; அன்பையும்;* **இப்போதே** *விசுவாசித்து, எல்லாவற்றிற்காகவும்* **இப்போதே** *ஸ்தோத்தரிக்க ஆரம்பிப்பான்!*

*தேவன் நம்மோடு இடைபடும் எல்லாக் கிரியைகளின் நோக்கமும், நாம் அவருடைய சுபாவத்தை சுதந்தரித்திட வேண்டும் என்பதுதான். தேவன் சகலத்தையும் நம்முடைய நன்மைக்காகவே நடப்பிக்கிறார். . . எந்த நன்மை? ஆம்! நாம் அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாய் மாறும் அந்த மேலான நன்மையே!! (ரோமர் 8:28, 29) ஆகும்.*

*சில சமயங்களில், நாம் திடீரென்று பணத்தை இழக்கவோ அல்லது மனசாட்சியற்ற மக்களால் ஏமாற்றப்படவோ தேவன் ஏன் அனுமதிக்கிறார்? நம்மில் அநேகர் நெரிசலான புகைவண்டியில் அல்லது பஸ்களில், நம் பணம் "பிக்பாக்கெட்" அடிக்கப்படும் அனுபவத்தையும் அடைந்திருக்கிறோம். நானோ, இவ்விதமான நேரங்களை இந்தத் திருடர்கள் அல்லது ஏமாற்றுக்காரர்களுக்காய் ஜெபிக்கும் நல்ல தருணமாகவே எடுத்துக்கொள்கிறேன். இவையெல்லாவற்றிற்கும் மேலாக தேவன் அதிகமாய் விரும்புவதெல்லாம், பணத்தோடும் - உலகப்பொருட்களோடும் உள்ள நம்முடைய* **அசாதாரணமான பிடிப்பிலிருந்து** *நாம் விடுபட வேண்டும் என்பதேயாகும்! நாம் இழந்த ஒவ்வொரு ரூபாயையும் விரல்விட்டு எண்ணி ஏங்கிக் கவலைகொள்ளவோ அல்லது நாம் லாபமடையும் ஒவ்வொரு பணத்திற்காகவும் மகிழ்ச்சியடையவோ தேவன் ஒருபோதும் விரும்புவதில்லை! ஆம், நாம்* **"அவரில்" களிகூர்ந்து** *மகிழ்ந்திருக்கவே அவர் விரும்புகிறார். இந்த மகிழ்ச்சி எப்படிப்பட்டது? உலக லாபம் கிடைத்துவிட்டதால் கூடவோ, அல்லது உலக நஷ்டத்தால் சற்றும் குறையவோ முடியாத மாறாத மகிழ்ச்சி!*

*இப்பூமியில் இயேசு இவ்விதமாய்த்தான் நடந்துகொண்டார். இப்போது நாமும் அவர் நடந்தபடியே நடப்பதற்கு அழைக்கப்படுகிறோம். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" (பிலிப்பியர் 2:5) என்றல்லவா வேதம் கூறுகிறது. இயேசுவுக்கு யாராவது, அவருடைய ஊழியத்தால் ஆசீர்வதிக்கப்பட்டதினிமித்தம் நன்றியுணர்வோடு "பத்தாயிரம் ரூபாய்" கொடுத்திருப்பார்களென்றால், இச்செயல் அவருடைய சந்தோஷத்தை இம்மி அளவுகூட அதிகரிக்க முடிந்திருக்காது! ஏனெனில் அவர்* **பிதாவின்மேல் வைத்த சந்தோஷம்** *"ஏற்கனவே" நிறைந்ததாகவும், வழிந்தோடுவதாகவும் இருந்தது!! அதுபோலவே, உலகப்பொருட்களின் நஷ்டத்தாலும் அவருடைய சந்தோஷம் குறைந்திட முடியாததாய் இருந்தது! இயேசுவுக்கு அன்பளிப்பாய் வந்த அதிகமான பணத்தை யூதாஸ்காரியோத்து சுரண்டி சுரண்டி திருடிக் கொண்டிருந்தான். இயேசுவும் இதை நன்கு அறிந்திருந்தார். அவர் யூதாஸ்காரியோத்துக்காக மனம் வருந்தினாலும், தான் இழந்த பணத்திற்காக ஒருபோதும் 'மனக்கிலேசம்' அடையவேயில்லை!*

*தேவனுடைய பிள்ளைகள் கொடுக்கும் காணிக்கையினிமித்தம், இன்றைய பிரசங்கிகள்-சுகமளிப்பவர்களின் மனோபாவம்தான் எவ்வளவு முரண்பாடாய் இருக்கிறது! இப்பிரசங்கிகளையும் சுகமளிப்பவர்களையும் விட்டுத்தள்ளுங்கள்... உங்களைக் குறித்து என்ன? உலகப்பொருட்களினிமித்தம் உங்கள் சந்தோஷம் கூடவோ குறையவோ முடிகிறதா? அப்படியென்றால், நீங்கள் உங்களை நீங்களே நியாயந்தீர்த்து, இப்படிப்பட்ட மனோபாவத்திலிருந்து இரட்சிப்படையும்படி பயத்தோடும் நடுக்கத்தோடும் பிரயாசப்பட வேண்டியது மிகவும் நிர்ப்பந்தமான அவசியமாகும்!!*

*நீங்கள் கிறிஸ்துவைப்போல் மாறும் ஜீவியத்தில் முழுவிருப்பமுள்ளவராயிருந்தால், தேவன் உங்களை உலகப்பொருளின் ஆசை, மனுஷீக கனத்தை தேடுதல், சுய அனுதாபம் போன்ற அநேக கிறிஸ்துவற்ற மனோபாவத்திலிருந்து விடுதலையாக்குவதற்கு ஏதுவாய்* **எண்ணற்ற நிகழ்ச்சிகள்** *உங்கள் வாழ்க்கையில் நிகழ்வதற்கு அனுமதிப்பார். ஆனால் 'உங்களுக்கு விருப்பம் இல்லையென்றால்' இவ்வித வழி செல்வதற்கு அவர் ஒருபோதும் வற்புறுத்தமாட்டார்! உங்களைச் சுற்றியுள்ள அநேக விசுவாசிகளின் தரம் குறைந்த தோற்கடிக்கப்பட்ட வாழ்க்கையில் நீங்களும் திருப்தியுற்றிருந்தால் உங்களை அப்படியே தனியே ஒதுக்கி வைத்துவிடுவார். ஆனால் தேவனுக்குரிய மேன்மையான காரியத்தில் நீங்கள் தாகம் உள்ளவராயிருந்தால், உங்களிடம் அவர் தீவிரமாய் செயல்பட்டு உங்களை அழித்துக் கொண்டிருக்கும் "புற்றுநோயை" வெட்டி எறிவார்! உங்களைக் கறைப்படுத்தும் "விக்கிரகங்களை" அழித்து ஒழிப்பார்! நீங்கள் துயரமடையவும், ஏமாற்றம் அடையவும், நஷ்டமடையவும், நம்பிக்கை குலையவும்,*

இழிவுபடுத்தப்படவும், அநீதியாய் புறங்கூறப்படவும் அவர் அனுமதிப்பார்! எதற்கு? நீங்கள் இனி ஒருபோதும் அசைக்கப்பட முடியாத ஸ்தானத்திற்கு அவர் உங்களைக் கொண்டுவரும்படிக்குத் தான்!! **அதற்குப் பிறகு,** நீங்கள் பணக்காரராய் இருந்தாலோ, ஏழையாய் இருந்தாலோ, அவமதிக்கப்பட்டாலோ, இவையொன்றும் உங்களில் எந்த வித்தியாசத்தையும் கொண்டுவர முடியாது!! இம்மண்ணுலகின் ஒவ்வொரு காரியத்திலும் நீங்கள் **கிறிஸ்துவின் மரணத்தை** அடைவதால், இயேசுவின் வாழ்க்கையில் பங்குள்ளவர்களாய் மாறி, இவ்வுலகில் நீங்கள் ஒரு ராஜாவைப்போல நடக்க ஆரம்பிப்பதை நீங்களே காண்பீர்கள்! (2 கொரி. 4:10).

சுயத்திற்கு மரிப்பதின் "விலைக்கிரயத்தை" மிகக் கொஞ்சம் பேர்களே செலுத்த விரும்புகிறபடியால், கிறிஸ்துவின் பரிபூரண ஜீவியத்தை அடையும் வழியைக் கண்டுகொள்பவர்களும் மிகச் சிலராகவே இருக்கின்றனர். நாம் சுயத்திற்கு மரிக்கவில்லையென்றால், விசுவாசத்தினால் ஜீவிப்பதென்பதும் ஒருபோதும் முடியாது!

மனப்பூர்வமாய் கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட உங்களுக்கு விருப்பம் இல்லையெனில், நீங்கள் அறிந்துகொண்ட "தேவனுடைய பரிபூரண அன்பின்" அறிவு அனைத்தும் வெறும் எழுத்துக் குவியலே!

ஆம், இவ்வுலகத்திலுள்ள எல்லாவற்றையும் நாம் வெறுக்கவில்லையென்றால், நாம் இயேசுவைப் பின்பற்றும் அவரது சீஷராய் இருப்பது ஒருக்காலும் முடியாது (லூக்கா 14:33).

யோவான் 17:23-ல் இயேசு இவ்வுலகத்திற்காகவோ அல்லது மனுஷீகக் கிறிஸ்தவர்களுக்காகவோ (Carnal Chrisitans) ஜெபிக்கவில்லை. மாறாக, "எல்லாவற்றையும்" வெறுத்துவிட்டு அவரைப் பின்பற்றிய 11-சீஷர்களுக்காகவே ஜெபித்தார்! **இவர்களே,** இம்மண்ணுலக மக்களும்-மாம்ஷீகக் கிறிஸ்தவர்களும் கண்டுகொள்ள முடியாத "பிதாவின் அன்பின் பாதுகாப்பைத்" தங்கள் வாழ்வில் மெய்யாய் கண்டவர்கள்!

இன்று ஏன் அநேக கிறிஸ்தவர்கள் "மாம்ஷீகக் கிறிஸ்தவர்களாய்" இருக்கின்றனர்? ஏனெனில் பிசாசானவன், இவர்கள் தங்களைத் தேவனுக்குப் பூரணமாய் ஒப்புக்கொடாமல் "இம்மண்ணுக்குரியதையும்-விண்ணுக்குரியதையும் சேர்த்துப் பெற்றுக்கொண்டு" அதிக சந்தோஷமாய் இருக்கலாம் என அவர்களை சிந்திக்க வைத்து ஏமாற்றியிருப்பதால்தான்! ஆனால், இது ஓர் கொடிய வஞ்சகம்!! நாம் தேவனுடைய பரிபூரண அன்பை விசுவாசித்திருப்போமென்றால் "கொஞ்சம்கூட" நமக்கென்று ஏதும் "பதுக்கிக்கொள்ளாமல்" எல்லாவற்றையும் மனப்பூர்வமாய் அவருக்கு ஒப்புக் கொடுத்திருப்போம்! அப்படிச் செய்திருந்தால் பிலிப்பியர் 4:6,7-ல் வேதம் சொல்லுகிறது போல "எல்லா" பதட்டமான கவலைகளி

*லிருந்தும் நாம் "பரிபூரணமாய்" விடுதலையாகியிருப்போம்! ஆனால், மாம்ஷீகக் கிறிஸ்தவர்களோ, "எங்கே இந்தப் படகு நடுவில் புயலினிமித்தம் கவிழ்ந்துவிடுமோ" என்று எப்போதும் சந்தேகித்து சஞ்சலத்துடன் இருப்பார்கள்! பிதாவின் பூரண அன்பில் பாதுகாப்பாயிருந்த இயேசுவால், புயலினூடேயும் 'ஆழ்ந்த நித்திரையாய்' இளைப்பாற முடிந்தது. "இவ்விதமாகப்" பிசாசு தன்னை மூழ்கடிக்க ஒருக்காலும் முடியாது என இயேசு நன்றாய் அறிந்திருந்தார். ஏனெனில், அந்தப் பிதா இயேசுவை எப்போதும் கண்ணுறங்காமல் காவல் புரிகிறாரே! இவ்விதமாக, இயேசுவை நேசித்துக் காத்துக்கொண்டது போல பிதா நம்மையும் நேசித்துக் காக்கிறார் என்பதை நாம் அறிந்து கொண்டோமென்றால் இவ்வாழ்க்கையின் மகத்துவம்தான் என்னே!!*

*கடைசியில், நாம் தேவனை நேரில் காணும்போது நாம் நினைத்ததைவிட அவர் நம்மீது வைத்த அன்பு மிகவும் பெரியது என அன்று அறிந்து வியப்படைவோம்! அப்போதுதான் நம்முடைய "கவலைகள்"* (Anxieties) *எல்லாம் எவ்வளவு மதியீனமானது என்று உணர்வோம். இவ்வாறு அந்நாளில் இதை உணர்வதால் என்ன பிரயோஜனம்? தேவையெல்லாம் "*__இன்று__*" நம் கண்கள் அவருடைய அன்பைக் காணும்படி திறக்கப்பட்டு விசுவாசத்தில் ஜீவிப்பதேயாகும்!!*

# திராணிக்குமேல் நாம் சோதிக்கப்படுவதில்லை



# 7

*ஓர் மகிமையான வசனமாய் 1 கொரிந்தியர் 10:13 இருப்பதைப் பாருங்கள்! நாம் எல்லோருமே, இவ்வசனத்தில் சொல்லொண்ணா ஆறுதலைக் காணமுடியும். அப்படி இந்த வசனம் என்ன கூறுகிறது? "தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார்.* **உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல்,** *சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார்" என்பதே!*

*"தாங்கமுடியாத சோதனைக்கும், கஷ்டத்துக்கும் ஆளாகிறோம்" என ஜனங்கள் அடிக்கடி சொல்லுவதுண்டு. ஒருவேளை, ஆதாமின் பிள்ளைகளுக்கு வேண்டு மென்றால் இது உண்மையாக இருக்கலாமே அல்லாமல்* **தேவனுடைய பிள்ளைகளுக்கு** *அப்படி அல்லவே அல்ல! ஏனெனில், நம்முடைய பாதைக்குள் பிரவேசிக்கும் ஒவ்வொரு சோதனையையும், பரீட்சையையும் தேவன் மிக உன்னிப்பாகக் கவனித்தே நம்மைப் பராமரிக்கிறார்!*

*சாத்தானோ அல்லது நம்மை வெறுப்பவர்களோ நம்மைப் பலவிதத்தில் துன்புறுத்துவதற்கு விரும்பலாம்! "ஆனால்" தேவனுடைய அனுமதியில்லாமல் அவர்கள் நம்மை நெருங்கவே முடியாது!! பழைய ஏற்பாட்டில், யோபுவை எந்தத் தீங்கும் தொடமுடியாதபடி தேவன் அவனைச் சுற்றி வேலியிட்டுக் காத்ததை சாத்தான் உணர்ந்திருந்தான் (யோபு 1:10). இருப்பினும் யோபுவைப் பரிசுத்தப்படுத்தும்படிக்கு, தேவன் அந்த வேலியை "கொஞ்சம்" திறக்கும்படி செய்து, அவனைத் தாக்குவதற்கு சாத்தானை அனுமதித்தார். வேலி எவ்வளவு திறக்க வேண்டும் என்பதை 'தேவனன்றோ' தீர்மானித்து நியமனம் செய்தார்! ஆரம்பத்தில் கொஞ்சம்*

*திறக்கப்பட்டது! (யோபு 1).அதற்குப் பிறகு 'சற்றே அதிகமாய்' திறக்கப்பட்டது! (யோபு 2). இவ்வாறு தேவன் திறந்த அந்த வேலியின் வழியாகச் சபேயர்களும், கல்தேயர்களும் நுழைந்து யோபுவின் சம்பத்துக்களைக் கொள்ளையடித்தார்கள் (யோபு 1:15,17). யோபுவின் பிள்ளைகள்மேல் வீடு விழும்படியாக வீசிய பெருங்காற்றும், இவ்வாறு தேவன் திறந்த வேலியின் வழியாகத்தான் பிரவேசித்தது. இருப்பினும், யோபுவின் சரீரத்தை நோய் தாக்கும் அளவிற்கு இந்த வேலி அதிகமாய்த் திறந்திருக்கவில்லை! தேவன் வேலியை 'இன்னும் கொஞ்சம் அதிகமாய்' திறந்த பின்புதான் "**நோயும்**" உள்ளே பிரவேசித்து யோபுவை வாதிக்க முடிந்தது!*

*தனக்கு நிகழ்பவைகளையெல்லாம் தேவன் "கண்ட்ரோல்"* (Control) *செய்து கொண்டிருக்கிறார் என்பதை யோபு முதலில் அறிந்துகொள்ளவில்லை. எல்லாம் நிறைவேறி முடிந்த பின்புதான் அதை அறிந்துணர்ந்தான். அவனுக்கு நம்மைப்போல் எழுதி வைக்கப்பட்ட வேதவசனங்கள் இல்லாதபடியால், நாம் யோபுவைக் குறை சொல்லவே முடியாது! ஆனால் இப்போதோ, தேவனுடைய பிள்ளைகளைச் சுற்றியுள்ள வேலியை ஆளுகை செய்பவர் இன்னார் என்பதை அறிவிக்கும் வேதவசனம் நம்மிடம் இருக்கிறது. நம்மைச் சுற்றிலும் அக்கினி மதிலாக தேவனே அந்த வேலியாய் இருக்கிறார் என்று சகரியா 2:5 பறைசாற்றுவதையும் நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் பரிதாபம்! எலிசாவின் வேலையாளைப் போல, இப்பரலோக உண்மையைக் காணமுடியாதபடி நம் கண்கள் அடிக்கடி குருடாய்ப் போகிறது. நம்மைச் சுற்றி உள்ள அக்கினி மதிலை நம் கண்கள் காண்பதே இல்லை. எலிசாவினால் இதைக் காணமுடிந்ததால் அவன் கொஞ்சமும் பயம் அற்று இருந்தான் (2 இராஜா.6:15-17). நம்முடைய கண்களும் இவ்விதம் திறக்கப்பட வேண்டியது மிகவும்அவசியமன்றோ!*

*திரும்ப இந்த வேலியை எப்போது அடைக்கவேண்டும் என்பதையும் தேவன் அறிந்திருக்கிறார். நம்முடைய* **ஆவிக்குரிய திராணியின்படியும்,** *தேவனுக்குரிய மேலானவைகளில் நம்முடைய* **வாஞ்சையின்** *அளவின்படியும் தேவன் நம்முடைய சூழ்நிலைகளை மிகத் துல்லியமாகக் கண்காணித்து ஆளுகை செய்கிறார்! நாம் ஆவிக்குரிய வளர்ச்சியற்று, பெலவீனமாய் இருக்கும்போது, மனுஷர் மூலமாகவோ பிசாசின் மூலமாகவோ கொடூரமாய்த் தாக்கப்பட தேவன் அனுமதிக்கவே மாட்டார். அதேசமயம்,* **நம் வாழ்க்கையில் தேவன் வைத்திருக்கும் நோக்கத்தின்மேல்** *நமக்கு விருப்பம் இல்லையென்பதைத் தேவன் காணும்போதும், நம் ஜீவியத்தில் நாம் மிக எளிதான பாதை செல்லவும் அனுமதித்து விட்டுவிடுவார்! இதன் விளைவாய் நாம்தான் நித்தியத்தில் பேரிழப்பைத் தழுவி நிற்போம்!!*

*தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஊழியர்களில் ஒருவனாய் யோபு இருந்தபடியினால்தான், அவன் கடுமையான பாடுகளை*

*சந்திக்கும்படி தேவன் அனுமதித்தார்! எல்லோருடைய வாழ்க்கையிலும் இவ்விதமாய் சம்பவிக்க தேவன் அனுமதிக்க மாட்டார்! ஏனெனில்,* **"தாங்கிக்கொள்ள முடியும்" என்ற பக்குவநிலை** *அடைந்தவர்கள் மிகவும் சிலரே! இவ்வித ஆவிக்குரிய முதிர்ச்சியை அடைவதற்கு* **மிகச் சிலர்தான்** *விருப்பம் கொண்டிருக்கிறார்கள்.*

*நாம் சந்திக்கக்கூடிய எல்லா சோதனைகள் வழியாகவும், இயேசுவானவர் தன் பிதாவினால் அழைத்துச் செல்லப்பட்டார். இப்படித்தான் அவர் பூரணரானார்! (எபி.4:5; 5:7-9). நாமும் பூரணராவதற்கு இதைத் தவிர வேறு வழியே இல்லை!!*

*"நாம் திராணிக்கு மேலாய் சோதிக்கப்படவோ அல்லது பரீட்சிக்கப்படவோ தேவன் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்" என்ற சத்தியம்தான், நம் வாழ்க்கையின்* **எல்லா நேரங்களிலும்** *நாம் ஜெயஜீவியம் செய்திட முடியும் என்ற நம்பிக்கைக்குக் காரணமாயிருக்கிறது!! இவ்விதமாய் 1 கொரிந்தியர் 10:12 மூலம் தேவனுடைய உத்திரவாதம் கொடுக்கப்படவில்லையென்றால், நாம் இப்படிப்பட்ட நம்பிக்கை கொள்ள முடியவே முடியாது!!*

*ஆம், நம் பாதைக்குள் பிரவேசிக்கும் ஒவ்வொரு சோதனையும் பரீட்சையும் ஜெயிப்படத்தக்கதே என தேவன் உத்திரவாதம் அளிக்கிறார். இவ்வாறிருக்க நாம் ஏன் வீழ்ச்சியடைகிறோம்? ஏனெனில், ஒவ்வொரு சோதனைகளிலும் பரீட்சைகளிலும் தேவன் நமக்கு வகுத்துக் கொடுத்திருக்கும் "தப்பிக்கொள்ளும் வழியை"* (Way of Escape) *நாம் பின்பற்றாததால்தான்!*

*"தப்பிக்கொள்ளும் அந்த வழி"தான் என்ன?*

*அது,* **நம்மை நாமே தாழ்த்துவதுதான்.** *இயேசு சிலுவையின் மரணபரியந்தம் தன்னைத்தானே தாழ்த்தியதைப் போல! (பிலி.2:8). பரிபூரண ஜீவனுக்குள் நடத்தும் இந்த இடுக்கமான வழியைக் கண்டுகொண்டவர்கள் மிகவும் சிலரே. பெருமையானது நம் மாம்சத்தில் ஆழமாய் வேரூன்றியிருக்கிறபடியால், மகிமையான இத்தாழ்மையின் வழியை மிகவும் கொஞ்சம்பேர்களே கண்டுள்ளனர். சொல்லப் போனால், தன்னைத்தானே தாழ்த்துவது இன்னதென்றே கூட அறியாமல் ஏராளமான விசுவாசிகள் இருக்கிறார்கள். ஆம்! இது ஓர் இரகசியம்தான். . . ஆனாலும், நீங்கள் முழு இருதயம் உள்ளவரா யிருந்தால் தேவன் இந்த இரகசியத்தை உங்களுக்கு வெளிப்படுத்துவார்!!*

*"வாழ்க்கையின் சுமையானது" அதைத் தாங்கவொண்ணாத தாயிருக்கிறது என்று நாம் எண்ணிக்கொள்ளுகிறோம்! ஆனால் உண்மை என்னவென்றால், நம்மைக்குறித்து வைத்துள்ள மேட்டிமை எண்ணங்களான பெருமைதான் இதற்கெல்லாம் காரணம்! இதைக்குறித்து நான் ரிசர்வ் செய்யாத நெரிசலான புகைவண்டியில் பயணம் செய்யும் சமயங்களில் தியானித்திருக்கிறேன். உட்காருவதற்கு*

இடமில்லாமல், தரையின் ஓர் மூலையில் உட்காரவோ அல்லது சில சமயங்களில் நின்றுகொண்டு வரவோ வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. புகைவண்டிப் பெட்டியோ, ஸ்டேஷன் ஆரம்பத்திலிருந்தே ஜனங்களாலும், சாமான்களாலும் நிறைந்திருக்கும். அடுத்து ஒவ்வொரு ஸ்டேஷனில் நிற்கும்போதும், மேலும் அதிக ஜனங்களும் சாமான்களும் ஏறுவதால் நிலைமை மிக மோசமாகிவிடும்! தொடர்ந்து நெருக்கடி அதிகமாகிக் கொண்டேதான் போகும்!! இச்சமயங்களில், "நான் இப்போது ஒரு எறும்பின் அளவாய் (Size) மாற முடியுமென்றால் எனக்கு இந்த நெரிசல் இருக்காதே!" என எனக்குள் சிந்திப்பதுண்டு. ஆம், 'அளவினிமித்தமே' நெருக்கடி அதிகமாயிருப்பதை உணர்கிறேன். என்னைவிடப் பருமனான அளவு கொண்ட ஓர் மனிதனின் கதி இன்னமும் மோசமானதுதான்! நெருக்கடியெல்லாம் "அளவைப்" பொருத்தே இருக்கிறது. ஆனால் ஒரு சிறிய எறும்போ, நெரிசலான ரயில் பெட்டியையும் விசாலமான இடமாய் கருதி, அங்குள்ள நெரிசலைக்குறித்து கொஞ்சமும் குறை கூறாது!

இதுவே ஆவிக்குரிய விடையையும் நமக்கு அளிக்கிறது. நெருக்கத்தின் சுமை என்னைச் சுற்றிலும் அதிகரிக்கும்போது, நான் மாத்திரம் **என் கண்களுக்கு சிறியதாய். . . . சிறியதாய்,** மாற முடியுமென்றால், நெருக்கடியானது குறைந்து சீக்கிரமே ஒன்றுமில்லாமல் மறைந்தும்விடும்!! தேவன் "நம்மைக் குறைத்து" சிறியதாய் மாற்றவே விரும்புகிறார். அவர் தன் நோக்கத்தை நம் மூலமாய் நிறைவேற்றுவதற்கு முன்பாக, நம்மைக் குறைத்து, குறைத்து நம்முடைய சுய எண்ணத்தில் "பூஜ்ய நிலைக்கு" கொண்டுவர வேண்டியதாயிருக்கிறது.

உதாரணமாக, நாம் ஏன் ஜனங்களிடம் மனம் புண்பட்டுவிடுகிறோம்? நம்மைக்குறித்தும், நம் உரிமையைக் குறித்தும் மேட்டிமையான எண்ணம் கொள்வதால் அல்லவா? ஜனங்கள் நமக்குத் தரவேண்டிய மரியாதையைத் தரவில்லை என்றே எண்ணுகிறோம். அல்லது நமது உரிமைகளை மற்றவர்கள் தட்டிப் பறிப்பதாகக் கருதுகிறோம். நமக்குப் பின்னால் தீமையாய்ப் புறங்கூறும் ஜனங்களினிமித்தம் மனம் புண்பட்டுவிடுகிறோம்! கொழுத்துப் பருமனாகிவிட்ட நமது பெருமையே இத்துன்பங்களுக்கெல்லாம் காரணம்! **இப்பெருமையின் பலூனைக் 'குத்தி' உடையுங்கள்!** இவ்வாறு உண்மையாகவே உடைத்து வெறுமையாக்கப்படும்போது, அங்கு நிச்சயமாக எந்தவித நெருக்கமான அழுத்தமும் காணமுடியாது. இதுதான் இரகசியம்! இதைக் காணும்படி தேவன் நம் கண்களைத் திறப்பாராக! நம்மைச் சுற்றியுள்ள ஜனங்கள் ஆயிரக்கணக்கான காரியங்கள் நிமித்தம் குறைகூறிக் கொண்டிருக்கும் வேளையில், நமக்கோ குறை கூறுவதற்கு ஒன்றும் இல்லை! ஏனெனில், நம்மை நாமே தாழ்த்தும் "தப்பிக்கொள்ளும் வழியைத்தான்" இப்போது கண்டுகொண்டோமே!!

# 8

# தாழ்மையுள்ளவர்களுக்கு தேவன் தரும் கிருபை



நம்மை நாமே தாழ்த்துவதற்கு தேவன் ஏன் விரும்புகிறார்? என்பதற்கு ஓர் முக்கிய காரணம் உண்டு! அதென்னவெனில், அவர் **தம் கிருபையை** அப்போது தான் நமக்குத் தரமுடியும். தேவனே விதித்த பிரமாணங்களை, அவர் ஒருபோதும் மீறிட இயலாது. 'அவரே முன்னின்று' நிறைவேற்றும்படியான பிரமாணங்களில் ஒன்றுதான்: "பெருமையுள்ளவர்களைத் தேவன் எதிர்த்து தாழ்மையுள்ளவர்களுக்கு அவர் கிருபையைத் தருவதேயாகும்!" (1 பேதுரு 5:5). எவ்வளவுதான் அவர் நம்மை நேசித்தாலும், நாம் பெருமையுள்ளவர்களாயிருந்தால் அவர் தன் கிருபையை நமக்குத் தரவே முடியாது. இவ்விதமாய் தேவனிடமிருந்து வரும் கிருபையை இழப்போமென்றால், நாம் வெற்றியின் ஜீவியம் செய்வதும் சாத்தியமாகாது. சோதனையின் வலிமையை தேவனுடைய கிருபையின் வலிமையினால் மாத்திரமே வெல்ல முடியும்!

நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய் வந்தது. ஆனால், கிருபையோ இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வந்தது (யோவான்1:17). நியாயப்பிரமாணத்தின் கீழ் (பழைய உடன்படிக்கையில்) ஜனங்கள் தங்கள் இருதயத்தில் சோதனையோடு கடுமையாய்ப் போராடினாலும், எப்போதும் அவர்கள் தோல்வியையே தழுவினார்கள். தர்சுப் பட்டணத்தானாகிய சவுல், தேவனுடைய பிரமாணத்தின் வெளியரங்கமான (External) தரத்தில் பூரணமாய் ஜீவித்தாலும் (பிலி.3:6), "இருதயத்திலிருந்து" உண்டாகும் இச்சைக்கு முன்பாக வலிமையற்றவனாகவே இருந்தான் (ரோமர் 7:7-11). ஆம், நியாயப்பிரமாணம் **இருதயத்திலிருந்து** பிறக்கும் இச்சையிலிருந்து ஜனங்களை விடுவிக்க முடியவில்லை.

*இந்த நியாயப்பிரமாணம் அதற்காக நியமிக்கப்பட்டதும் அல்ல. ஆம், மனுஷனுடைய உள்ளான பாவத்தையும், அவனுடைய இருதயத்திலிருந்து உண்டாகும் இச்சையிலிருந்து விடுதலையாக முடியாத அவனுடைய நிர்ப்பந்த நிலையையும் உணர்த்தவே நியாயப்பிரமாணம் தரப்பட்டது!!*

*ஆனால் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டான புதிய உடன்படிக்கையின் நற்செய்தி என்னவெனில், நியாயப்பிரமாணத்தினால் கூடாதது கிருபையினால் கூடும் என்பதுதான்! "கொஞ்சமும் அருகதையற்றவர்களாகிய நம்முடைய பாவங்களை மன்னிக்கும் தயவு" என்பது மாத்திரம் தேவனுடைய கிருபை அல்ல. அவர் கிருபை இதைவிட மேலானதாகும்! கிருபையானது* **தேவனுடைய பெலன்!!** *(2கொரிந்தியர் 12:9-ல் கிருபையானது பெலனுக்குச் சமமாய் சொல்லப்படுவதைக் கவனியுங்கள்). இந்த பெலன் அல்லது இந்த வல்லமையே நம்முடைய சோதனையின் இக்கட்டான நேரத்தில் நமக்கு சகாயம் செய்ய அல்லது உதவி செய்ய கரம் கொடுக்கிறது (எபி.4:16). இனியும் நம் இருதயம், இச்சையினாலோ அல்லது பொருளாசை யினாலோ கறைப்படாதபடி* **"நம் இருதயத்தை" ஸ்திரப்படுத்த** *கிருபைக்கு அவ்வளவு வலிமை இருக்கிறது (எபி.13:9). புதிய உடன்படிக்கையின் நற்செய்தி இதுதான்! கிருபையின் மூலமாகவே, தேவன் நம் இருதயத்திலும், மனதிலும் தன் பிரமாணங்களை எழுதுகிறார் (எபி.8:10). எனவேதான்* **மனப்பூர்வமாய்** *தேவனுடைய உயர்ந்த ஆவிக்குரிய தரத்தில் நாம் விருப்பம் கொள்ளவும், அவ்வாறு விரும்பியதைச் செயலாற்றவும் (பிலி.2:13) நாம் பெலன் கொள்ளுகிறோம். இவ்விதமாக, நியாயப்பிரமாணத்தின் நீதியானது இப்போது* **நமக்குள்** (inside of us) *நிறைவேறுகிறது (ரோமர் 8:4).*

*பெந்தேகொஸ்தே நாளில் தேவன் தனது ஆவியை ஊற்றியதன் பிரதான நோக்கமே இதுதான்! அந்நாளில், எருசலேம் வாசிகளின்மேல் ஊற்றப்பட்ட ஆவி "கிருபையின் ஆவியே" ஆகும் (சகரியா 12:10). ஊற்றெடுத்து ஓடும் இந்த நதி, நீர்வீழ்ச்சியைப் போல தேவனுடைய சிங்காசனத்திலிருந்து இன்றைக்கும் இப்பூமியில் புரண்டோடுகிறது! ஆம், இன்று தேவனுடைய பரலோக எருசலேம் வாசிகளாகிய 'சபை' இந்நீர்வீழ்ச்சியின் கீழ் வந்து தேவனுடைய கிருபையில் மூழ்கித் திளைத்திட முடியும். இவ்வாறாகவே, "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிராமல் (இப்போது)* **கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறபடியால்** *பாவம் உங்களை மேற்கொள்ள முடியாது" என்ற பொன்னான வாக்குத்தத்தம் நம்மில் நிறைவேற்றம் அடைகிறது! (ரோமர் 6:14). ஆ, இது என்னே ஆச்சரியம்!!*

*நாம் இந்த நீர்வீழ்ச்சியின் கீழ் வருவதற்கான ஒரே ஒரு நிபந்தனை என்னவெனில்,* **நம்மை நாமே தாழ்த்துவதுதான்!** *கிருபையானது... பாவத்திற்கு மேலாகவும், சூழ்நிலைகளுக்கு மேலாகவும், மனச்சோர்விற்கு மேலாகவும், சாத்தானுக்கு மேலாகவும், கசந்து கொள்ளுதல், பொறாமை*

கொள்ளுதல், இச்சித்தல் போன்ற எல்லாத் தீமையான குணங்களுக்கு மேலாகவும் **நம்மை உயர்த்த** வலிமை கொண்டதாகும்! "ஆகையால்... தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு **அவருடைய பலத்த கைக்குள்** அடங்கியிருங்கள்" (1 பேதுரு 5:6) என வேதம் நம் ஒவ்வொருவரையும் அழைக்கிறது.

நம்மைத் தாழ்த்தி அடங்கியிருக்கப்போகும் தேவனுடைய வல்லகரம் எப்படிப்பட்டது தெரியுமா? நம்முடைய பாதைக்குள் பிரவேசிக்கும் எல்லாச் சூழ்நிலைகளையும் மனுஷர்களையும் சர்வ அதிகாரத்துடன் ஆளுகை செய்யும் வல்ல கரம்!! நம்மை நாமே தாழ்த்துவதென்பது: சூழ்நிலைகள் மூலமாகவும், நம் "தலைக்குமேல் ஏறி" இம்சிக்கும் மனிதர்கள் மூலமாகவும்.... தேவன் அனுமதிக்கும் அவருடைய எல்லா இடைபடுதலுக்கும், நம்மை மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொடுத்தலேயாகும்! இவையெல்லாம் அளவுக்கு மீறி தாங்கொண்ணா நிலையாகிவிடுமே என்று நாம் அஞ்சிடத் தேவையேயில்லை. ஏனெனில், வேலியின் வழியைத் தேவனன்றோ கருத்தாய் காவல் புரிகிறார்! மேலும், அதை மீண்டும் எப்போது அடைக்க வேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும்!!

நாம் ஏதாவது பாவத்தினால் தோற்கடிக்கப்பட்டிருப்போமென்றால் அதற்கு ஒரே காரணமாயிருப்பது, பெருமைதான்! இப்பெருமை யினிமித்தமே கிருபையை தேவன் நமக்குத் தரமுடிவதில்லை. நாம் தோற்கடிக்கப்பட்டதை உணரும் ஒவ்வொரு நேரமும், தேவனிடம் சென்று, "**ஆண்டவரே, நான் ஜெயிப்பதற்கு உமது கிருபையை நீர் கொடுக்க முடியாதபடி தடை செய்த 'பெருமை' என் வாழ்வில் எங்குள்ளது என்பதைக் காண்பியும்**" என்று கேட்பது மிகவும் அவசியம். இவ்விதமாய், ஒவ்வொரு தோல்வியிலும் "துரிதமாய்" நம்மையே நாம் நியாயம்தீர்த்து நிதானிப்போமென்றால், சீக்கிரமே 'வெற்றி' நமக்குச் சொந்தமாகிவிடும்!!

பாவத்தின்மேல் பரிபூரண வெற்றியானது, புதிய உடன்படிக்கையில் நமது சுவீகார சுதந்திரமாகும்! அதைச் சாத்தான், உங்களின் அறியாமையினிமித்தமோ அல்லது பெருமையினிமித்தமோ கொள்ளையிட்டுவிடாதபடி எச்சரிக்கையாயிருங்கள்! நாம் ஜெயம் பெறுவதற்கு அதிக காலம் ஆகிறதென்றால், தேவன் நம்மைத் தாழ்மைப்படுத்துவதற்கும் அதிக காலம் ஆகிறதென்பதே காரணமாகும். ஆம், ஆதாமின் பிள்ளைகளை நிறைத்திருக்கும் சுய-நம்பிக்கையை உடைத்து நொறுக்குவதற்கு தேவனுக்கு அதிக காலம் ஆகிறது!!

"எங்களால்" பாவத்தை மேற்கொள்ள முடியும் என்று எண்ணுவதும், ஒருவிதமான பெருமையே ஆகும். நமக்குத் தேவை யெல்லாம் கணிசமான தீர்மானமும், கணிசமான சுய கட்டுப்பாடும். . . என்றே எண்ணிக்கொள்கிறோம்!! அல்லது, ஜெயஜீவியம் செய்வதைக் குறித்து இப்படிப்பட்ட புத்தகத்தில் வாசித்து, அதன் உபதேசம் நமக்கு நன்றாக விளங்கிவிட்டதால், ஜெயம் பெறுவது மிகவும் எளிது என்றும் எண்ணிக்கொள்ளுகிறோம். எனவேதான் மிகுந்த மனோதைரியத்தோடு

நடைபோடுகிறோம். ஆனால் இந்த நம்பிக்கை "சுய நம்பிக்கையே" அல்லாமல், தேவனுடைய கிருபையைப் பற்றிக்கொண்டது அல்ல என்பதை நாம் உடனடியாக உணருவதே இல்லை. இதோ! இப்போது நாம் மிகப் பரிதாபமாய் வீழ்ச்சியடைந்து விடுகிறோம். இவ்விதமாய் ஒருதடவை வீழ்ச்சியடைவதினிமித்தம் "பாடத்தைக்" கற்றுக்கொண்டோம் என்று எண்ணுகிறீர்களா? அதுதான் இல்லை! எனவே தேவன், நம்மை மறுபடியும். . . மறுபடியும் வீழ்ச்சியடைய அனுமதிக்கிறார். எதுவரை? என்னதான் நாம் நல்ல தீர்மானங்கள் எடுத்தாலும், நாம் அடிக்கடி வீழ்ச்சியடைவதினிமித்தம் இனியும் வெற்றியைக் காணமுடியும் என்ற நம்பிக்கை முழுவதையும் ஓர் நாளில் இழக்கும்வரை! இதுதான் **பூஜ்ய நிலை!** இந்த பூஜ்ய நிலையிலிருந்துதான் தேவன் நம்மை வாக்குத்தத்தப் பூமியாகிய வெற்றிக்குள் நடத்தமுடியும்!!

சுயநம்பிக்கை கொண்ட பெருமையான இஸ்ரவேலர்களை வனாந்திரத்தில் 40 வருடங்கள் சுற்றித்திரியும்படி தேவன் அனுமதித்தார். எதுவரை? அவர்களுடைய "யுத்தவீரர்கள் அனைவரும்" (இது சுயத்தின் வலிமையை சித்தரிக்கிறது) மாண்டு ஒழிந்து போகும்வரை (உபாகமம் 21:14-16). எகிப்தைவிட்டு வெளிவந்த 2- வருடங்களில் தேவன் அவர்களை வாக்குத்தத்தப் பூமியின் எல்லைக்குக் கொண்டுவந்துவிட்டார். இருப்பினும், **அவிசுவாசத்தினிமித்தமே** இவர்களால் கானானுக்குள் பிரவேசிக்க முடியாமல் போனது (எண்ணாகமம் 13-14 அதிகாரங்கள்). எனவேதான், இவர்கள் "பூஜ்ய நிலைக்கு" வரும்வரை, மீண்டும் 38-வருடங்கள் இவர்களை வனாந்திரத்தில் சுற்றித்திரியும்படி தேவன் வைத்தார். இவ்வாறு நீண்டகாலத்திற்குப் பிறகுதான் அவர்கள் கானானுக்குள் பிரவேசிக்க முடிந்தது. "இப்போது" மாம்சத்தின் பிரயாசம் கொஞ்சம்கூட இல்லாமல், அவர்களுக்கு முன்பாக நின்ற எரிகோ கோட்டை விழுந்து மடிந்தது!!

பார்த்தீர்களா, தேவன் நம்மூலம் கிரியை நடப்பிப்பதற்கு முன்பாக நம்மை "பூஜ்யநிலைக்கு" குறைத்துக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. அதற்கு 40-வருடங்கள் ஆகவேண்டும் என்பதில்லை! நீங்கள் மாத்திரம் ஆணித்தர உறுதி உள்ளவராய் இருந்து (Radical), என்ன விலைக்கிரயமானாலும் உங்களைத் தாழ்த்துவதற்கு தீர்மானிப்பீர் களென்றால். . . ஒன்று அல்லது இரண்டு வருடங்களிலேயே "**ஜெயபூமிக்குள்**" நீங்கள் பிரவேசித்துவிடுவீர்கள்!!

நாம் சூழ்நிலைகளையும் ஜனங்களையும் குறைகூறிக் கொண்டிருக்கும்வரை, ஜெயம் பெறுவதற்கு ஒருபோதும் நம்பிக்கை கொள்ளவே முடியாது. ஆனால் நம் எல்லா சூழ்நிலைகளையும் தேவன் தன்னுடைய மகத்துவமான ஆளுகையினால் "கண்ட்ரோல்" செய்கிறபடியால், எந்த சோதனையும் அளவுக்கு மீறி சென்றுவிட முடியாது என்று விசுவாசித்து, நம்மை நாமே தாழ்த்த முடியுமென்றால் **இப்போது வெற்றி** நமக்கு கையளிக்கப்பட்டுவிடும்! இது அற்புதமன்றோ!!

# சூழ்நிலைகளுக்குப் பின் தேவன் இருக்கிறார்



# 9

நம்முடைய விசுவாசம் அசைக்கபட முடியாததாய் இருக்க வேண்டுமென்றால், அது தேவனைப் பற்றிய தான மூன்று சத்தியங்களில் வேரூன்றி நிலைத்திருக்க வேண்டும்1) அவருடைய பரிபூரண அன்பு 2) அவருடைய சர்வ வல்லமை 3) அவருடைய அப்பழுக்கற்ற அனந்த ஞானம்.

முதலாவதாக அவருடைய அன்பை விசுவாசித்து நாம் கவரப்பட்டிருப்போமென்றால், அதற்கிணையாக அவருடைய ஆளுகை செய்யும் சர்வ வல்லமையையும் விசுவாசித்துக் கவரப்பட வேண்டியதும் மிக அவசியம்! எனவேதான், நாம் ஜெபிக்க ஆரம்பிக்கும்போது "**பரமண்டலங்களில்** இருக்கிற எங்கள் பிதாவே" என்று அழைத்து ஜெபிக்க இயேசு கற்றுத் தந்தார். "எங்கள் பிதாவே" என்பது அவருடைய பூரண அன்பையும், "பரமண்டலங்களிலிருக்கிற . . . பிதாவே" என்பது சர்வத்தையும் செம்மையாய் ஆளும் அவரது **சர்வ வல்லமையையும்** வலியுறுத்துகிறது. அவர் பரலோகில் இருக்கிறபடியால், பூமியில் உள்ள நம்மைக் காட்டிலும் அதிக ஞானம் நிறைந்தவர்! எனவேதான், அவருடைய பரிபூரண ஞானத்தால் நம்முடைய வாழ்வில் வழிகளை ஆயத்தம் செய்து கட்டளையிடுகிறார்: "தேவனுடைய வழி உத்தமமானது (அவர் ஞானத்தில் பரிபூரண மானவர்).... என் வழியைச் செம்மைப்படுத்துகிறவர் (என் சூழ்நிலைகளை செம்மையாய் ஆயத்தம் செய்து கட்டளையிடுகிறவர் தேவனே!)" என சங்கீதம் 18:20, 32-ல் வாசிக்கிறோம்.

தேவனானவர் அன்பிலும், வல்லமையிலும், ஞானத்திலும் பூரணமுள்ளவராய் இல்லையென்றால், நம்முடைய விசுவாசம் நிலைத்திருப்பதற்கு அஸ்திவாரம்

ஏதும் இருக்காது. ஆனால் இம்மூன்றிலும் அவர் நிறைவாய் இருக்கிறபடியால், நாம் ஒருபோதும் அசைக்கப்பட வேண்டியதே யில்லை! அளவற்ற தேவ அன்பிலும்; அவரது சர்வ வல்லமையிலும்; அவரது பரிபூரண ஞானத்திலும் நம்பிக்கையாய் இருந்து, நம் ஆள்த்துவம் முழுவதையும் அவரில் சார்ந்திருக்கச் செய்வதே விசுவாசமாகும்!!

பூமியைக் காட்டிலும் பரலோகம் உயர்ந்திருக்கிறபடியால், தேவஞானம் நம்மைக் காட்டிலும் மேலானது என்பதை ஒத்துக்கொள்வதற்கு நம்மில் யாருக்கும் பிரச்சனை இருக்காது என்றே எண்ணுகிறேன். தேவனுடைய வழிகளை, நாம் அநேக சமயங்களில் புரிந்துகொள்ள முடியாததற்கு இதுவே முக்கிய காரணம்! இது எப்படியெனில், ஓர் நாய் எவ்வாறு மனுஷர்களுடைய வழியைப் புரிந்து கொள்ள முடியாதோ அதைப்போல! நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சியடைந்து, அவருடைய திவ்விய சுபாவத்தில் அதிகமதிகமாய் பங்குபெறும்போது மாத்திரமே, தேவனுடைய வழிகளைக் கொஞ்சம் கொஞ்சமாய் அறிய ஆரம்பிப்போம்!!

“எல்லா சூழ்நிலைகளையும் - ஜனங்களையும்” தேவனே முழுமையாய் அரசாளுகிறார் என்ற சத்தியத்தை அநேக விசுவாசிகள் சந்தேகித்துத்... தயங்கித் ... தேங்கி நின்றுவிட்டனர்! தங்கள் உதடுகளால் ஒருவேளை இச்சத்தியத்தை அங்கீகரித்து ஏற்கலாம். ஆனால் இவர்களோ தங்களின் அன்றாட ஜீவிய சூழ்நிலைகளில் இதைக் “கிரியையில்” விசுவாசித்ததே இல்லை.

இருப்பினும், தேவன் எவ்விதமாய் தன் ஜனத்தினிமித்தம் அவர்களுக்கு விருப்பமற்ற வழியின் மூலமாகவும் ஆளுகை செய்து கிரியை செய்கிறார் என்ற எண்ணற்ற உதாரணங்களால் வேதாகமம் நிறைந்திருக்கிறது!

“அற்புத வழிகளின் மூலமாய்” எவ்வாறு ஜனங்களினிமித்தம் தேவன் கிரியை செய்தார் என்பதை நாம் ஏராளமாய் அறிந்திருக்கிறோம்! அதாவது, இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து விடுதலையான அற்புத நிகழ்ச்சியைப் போல! ஆனால் இதைவிடப் பெரிய அற்புதமாக, **சாத்தான் தேவ ஜனங்களைத் தாக்கும்போது,** அவனுக்கு எதிராகவே அத்தாக்குதலின் மேஜையை தேவன் எவ்வாறு திசை திருப்புகிறார் என்பதைக் காண அநேகர் தவறுகின்றனர்!

உதாரணமாய், யோசேப்பின் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களைத் தியானித்துப் பாருங்கள்! “தேவ அற்புதம்” அவன் வாழ்வில் பளிச்சிடுவதை நீங்கள் காண்பீர்கள்!! அவன் 30-வயதாகும்போது அவனை எகிப்தின் இரண்டாவது அதிபதியாக்கும்படி தேவன் ஓர் திட்டம் வைத்திருந்தார். யோசேப்பு கர்த்தருக்குப் பயந்த மனுஷனாயிருந்ததின் நிமித்தம், சாத்தானால் அவன் மிகவும் வெறுக்கப்பட்டான்.

எப்படியாகிலும் யோசேப்பை ஒழிக்கும்படி அவனுடைய மூத்த சகோதரர்களை சாத்தான் தூண்டிவிட்டான். ஆனால் அவர்களோ யோசேப்பின் ஜீவனை எடுத்துவிட முடியாதபடி, தேவன் யோசேப்பைக் காத்துக்கொண்டார். இருப்பினும் அவர்கள் அவனை இஸ்மவேல் வியாபாரிகளிடம் விற்றுவிட மாத்திரமே முடிந்தது. ஆனால், இந்த வியாபாரிகள் யோசேப்பை எங்கு கொண்டுசென்றார்கள் தெரியுமா? எகிப்திற்கே தான்! இது தேவனுடைய திட்டம் நிறைவேறியதின் **முதற்படி** ஆகும்.

எகிப்தில் யோசேப்பு, படைத்தளபதியான போத்திபாரால் விலைக்கு வாங்கப்பட்டான் (இதுவும் தேவன் நியமித்த ஏற்பாடே ஆகும்). போத்திபாரின் மனைவியோ பொல்லாத பெண்மணி. அவள் யோசேப்பின் சௌந்தரியத்தில் கண்போட்டு, மறுபடியும் மறுபடியும் அவனைத் தன் ஆசை வலையில் வீழ்த்த முயற்சித்தாள். கடைசியில் அவளது முயற்சி தோல்வியடைந்ததால் யோசேப்பை பொய்யாய் குற்றம் சாட்டி, அவனை சிறையில் அடைக்கும்படி செய்தாள். சிறையில் அவன் யாரைச் சந்தித்தான் என்று எண்ணுகிறீர்கள்? பார்வோனின் பானபாத்திரக்காரன்! இவ்வாறு பானபாத்திரக்காரனும் ஒரே நேரத்தில் சிறைக்கு வரும்படி செய்து, யோசேப்பு அவனைச் சந்திக்கும்படியாய் தேவன் ஏற்பாடு செய்தார். இது, தேவனுடைய திட்டம் நிறைவேறிய **இரண்டாம்படி** ஆகும்.

தேவனுடைய **மூன்றாவது படியானது,** பார்வோனின் பானபாத்திரக்காரன் யோசேப்பை 2-வருடங்கள் மறந்து போகும்படி தேவன் அனுமதித்ததே ஆகும் (ஆதி.40:23; 41:1 வாசியுங்கள்). இறுதியாக, சரியான நேரம் வந்தபோது (சங்.105:19,20), **யோசேப்பைக் குறித்ததான தேவனுடைய கால அட்டவணைப்படி** அவன் 30 வயதானவுடன், பார்வோனுக்கு ஓர் சொப்பனம் உண்டாகி.... "யோசேப்பு சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லுகிறவன்" என்பதை பானபாத்திரக்காரன் நினைவுகூர்ந்தான். இப்படித்தான் யோசேப்பு பார்வோனுக்கு முன்பாய் வரவழைக்கப்பட்டு, எகிப்தின் இரண்டாவது அதிபதியாக மாறினான்! தேவனுடைய நேரப்படி நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளும்தான் எத்தனை பூரணமானவைகள்! ஆ, இது அற்புதம்!!

தேவன் ஒழுங்குசெய்தவிதமாக, நாம் செய்யும்படியாய் ஒருக்காலும் சிந்தித்துக்கூட இருக்கமாட்டோம்! தேவனுடைய வல்லமை நமக்கிருந்தால், ஜனங்கள் யோசேப்பிற்குத் தீமை செய்ததை தடுத்திருப்போம். சிந்தனைக்கெட்டாத அற்புதம் என்னவெனில், ஜனங்கள் செய்திடும் தீமையானது **தேவனுடைய தீர்மானம் நிறைவேறுவதற்காய்** திருப்பப்படுவதுதான்! அவருடைய தீர்மானத்தின் படி அழைக்கப்பட்டவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்கும்படி, சாத்தானின் சதி மேஜையை அவனுக்கு விரோதமாகவே திருப்புவது தேவனின் பெரு மகிழ்ச்சியாகும்!

*இந்நிகழ்ச்சிகளை, நம் வாழ்வின் சூழ்நிலைகளோடு ஒப்பிட்டுப் பார்ப்போம். "***பொறாமையினால்***" நம்மை வெளியே தள்ள முயற்சிக்கும் தீய சகோதரர்களிடம் நம்முடைய மனநிலை எப்படி இருந்திருக்கும்? பொய்யாய் குற்றம் சுமத்திய **அந்தப் பொல்லாத பெண்ணிடம்** நமது மனோபாவம் எப்படி இருந்திருக்கும்? **அநீதியாய் சிறையில்** அடைபட்டதின் நிமித்தம் நமது மனோபாவம் எப்படி இருந்திருக்கும்? உதவி செய்வேன் என்று வாக்கு கொடுத்துவிட்டு அதை **மறந்து போகும் நண்பர்களினிமித்தம்** நமது மனோபாவம் எப்படி இருந்திருக்கும்? அவர்கள் வேண்டுமென்றோ - தற்செயலாகவோ செய்யும் எல்லா கிரியைகளையும், நம்முடைய வாழ்க்கையில் **அவரது தீர்மானம்** நிறைவேறும்படி தேவன் உபயோகிக்க முடியும் என்று நாம் விசுவாசிக்க முடிகிறதா? யோசேப்புக்கு அவ்வாறு நிறைவேற்றியிருந்தால், நமக்கும் அவ்வாறே நிறைவேற்றிட அவரால் முடியாதா? நிச்சயம் அவரால் முடியும்! அப்படியே நமக்கும் அவர் செய்திடுவார்!!*

*யோசேப்பின் வாழ்க்கையைக் குறித்த தேவனுடைய திட்டத்தை யார் குலைத்திருக்க முடியும் என்பதையும் சொல்லுகிறேன். ஒரே மனிதனால் அது கூடும்.... அது யோசேப்பே தான்! அவன் போத்திபார் மனைவியின் சூழ்ச்சி வலைக்கு இணங்கியிருப்பானென்றால், தேவனால் அவன் ஒதுக்கித் தள்ளப்பட்டிருப்பானே!!*

*உங்கள் வாழ்க்கையில் தேவன் குறித்ததான திட்டத்தை சீர்குலைப்பதற்கு இப்பூவுலகில் ஒருவர் இருக்கக்கூடுமென்றால், அது* **நீங்கள் ஒருவர்தான்!** *மற்றபடி, ஒருவரும் சீர்குலைத்திட முடியாது. உங்கள் சிநேகிதரானாலும் முடியாது! உங்கள் சத்துருவானாலும் முடியாது! தூதர்களானாலும் முடியாது! பிசாசுகளானாலும் முடியாது!! ஆம், நீங்கள் மாத்திரமே!!*

> ***இவ்வுண்மையை நாம் கண்டுகொண்டால், நமக்குத் தீமைசெய்ய விரும்புவோரினிமித்தம் ஏற்படும் எல்லாப் பயங்களுக்கும், தவறான மனோபாவத்திற்கும் நாம் நீங்கி விடுதலையாகி யிருப்போம்.***

*நமது மனம் இச்சத்தியத்தில் நிலைகொள்ளும்படி, பழைய ஏற்பாட்டிலிருந்து இன்னொரு உதாரணத்தைக் காண்பது நமக்கு நல்லது. எஸ்தர் புத்தகத்தில், தேவன் எவ்வாறு யூதகோத்திரம் முழுவதும் வெட்டுண்டு போகாதபடி காத்துக்கொண்டார் என்று வாசிக்கிறோம். எவ்வாறு? "ஒரு ராத்திரியில் ராஜாவால் தூங்க முடியவில்லை" அவ்வளவுதான்! .இந்த சிறிய சம்பவம், தேவன் தன் திட்டத்தை நிறைவேற்றுவதற்கேதுவாய் இருந்ததைக் காண்பது நமக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளிக்கிறது.*

*ஆமானும் அவன் மனைவியும் யூதர்களை அழிப்பதற்கு முன் செயலாக, "***மொர்தெகாயை***" மறுநாள் காலையில் தூக்குமரத்தில் தூக்கிலிடுவதற்கு ராஜாவிடம் அனுமதி கேட்கும்படியாக அன்று இரவு சதித்திட்டம் போட்டார்கள். ஆனால் இவர்கள் பொல்லாத திட்டம்*

*தீட்டிய அதே வேளையில், தேவன் மொர்தெகாய்காக தீவிரமாய் செயல்பட்டுக் கொண்டிருந்தார். இஸ்ரவேலைக் காக்கிற தேவன் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லையே! (சங்கீதம் 121:4).*

*ஆம், ராஜாவை அன்று ராத்திரி தேவன் தூங்கவிடவில்லை (எஸ்தர் 6:1). எனவே அந்த நேரத்தை, ராஜ்யத்தின் கால சரித்திர நடபடி புத்தகத்தை வாசிப்பதில் ராஜா செலவழித்தான் (இது எவ்வாறு தேவன் உருவாக்கிய செயல் என்பதை கீழ்வரும் வாக்கியங்கள் தெளிவுபடுத்தும்!). அதிகாலை விடியும்வரை பல மணி நேரங்கள் ராஜா அதை வாசித்தான். அப்போது, "ராஜா ஓர் சமயம் கொலை செய்யப்படுவதிலிருந்து மொர்தெகாய் அவரைக் காப்பாற்றினான்" என்று எழுதப்பட்டிருந்ததை வாசித்தான். அப்போது ராஜா தன் ஊழியர்களைப் பார்த்து, இச்செயலுக்காக மொர்தெகாயுவுக்கு ஏதேனும் கனமும் மகிமையும் செய்யப்பட்டதா? என்று கேட்டான். அதற்கு அவர்கள் "ஒன்றும் செய்யப்படவில்லை!" என்று பதிலுரைத்தனர்.*

*இங்கு தேவன் காலம் தவறாமல் நிகழ்த்தும் அவரது கிரியையின் பூரணம் மீண்டும் விளங்குகிறது. பாருங்கள்!* **சரியாய் இந்த நேரத்தில்தான்** *மொர்தெகாயைத் தூக்கிலிட ஆமான் அனுமதி கேட்குமாறு ராஜா முன் வந்து நின்றான். ஆமான், தான் கேட்க வந்ததை வாயெடுக்கு முன்பாக, ராஜா ஆமானிடம், "ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்கு என்ன செய்யப்பட வேண்டும்?" என்று கேட்டான். தன் அதிகாரத் தகுதியைக் குறித்த பெருமையில் மிதந்த ஆமான், தன்னைத்தவிர ராஜா யாரைக் கனம் பண்ண முடியும் என்று எண்ணிக்கொண்டு, "அம்மனிதனுக்கு ராஜ தர்பாருடன், ராஜமரியாதை அளிக்கப்பட வேண்டும்!" என்று ஆலோசனை கூறினான். ராஜா உடனே, "நீ சொன்னபடியே சீக்கிரமாய் மொர்தெகாய்க்கு செய்!" என்று கட்டளை இட்டான்.*

*இப்போது ஆமானின் முகம் போனபோக்கை நான் காண விரும்புகிறேன்! நம் தேவன்தான் எவ்வளவு அற்புதமாய் சதி மேஜையை சாத்தான் மேலேயே கவிழும்படி செய்கிறார்! கடைசியாக மொர்தெகாய்க்கு செய்த அதே தூக்கு மரத்தில் இந்தப் பொல்லாத ஆமான் தூக்கிலிடப்பட்டான். வேதம் சொல்லுவது போல் "படுகுழியை வெட்டுகிறவன், தானே அதில் விழுவான்; கல்லைப் புரட்டுகிறவன்மேல் அந்தக்கல் திரும்ப விழும்" (நீதி.26:27) என்பதாய் முடிந்தது!!*

*இங்கு நாம் கண்ட ஆமான், நமக்கு விரோதமாய் எப்போதும் தீங்கு செய்ய திட்டம் தீட்டும் சாத்தானையே சித்தரிக்கிறான். தேவன் அவனைத் தடுப்பதே இல்லை. ஏனெனில் அச்சதி மேஜையை சாத்தான்மீதே கவிழ வைப்பதற்கு அவர் மேன்மையான திட்டம் வைத்திருப்பார்!* **பிசாசு நமக்காகத் தோண்டும் குழி அவன் விழுவதற்கே காரணமாய் மாறும்!**

ஓர் மொழிபெயர்ப்பின்படி, செப்பனியா 3:17-ம் வசனம், "தேவன் அன்பின் மிகுதியால் அமைதியாய் அமர்ந்து நமக்காக எப்போதும் திட்டம் தீட்டுகிறார்" என்றே கூறுகிறது. ஆமானும் அவன் மனைவியும் தனக்கு விரோதமாய் சதித்திட்டம் தீட்டியிருப்பதை அறியாமல் மொர்தெகாய் **சமாதானமாய் தூங்கிக் கொண்டிருந்த** வேளையில், தேவன் மொர்தெகாயை காக்கும்படி திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார். எனவே மொர்தெகாய்க்கு ஆமானின் சதித்திட்டம் முன்கூட்டியே தெரிந்திருந்தாலுமேகூட "இப்போதும்" அவனால் சமாதானமாய்த் தூங்கிட முடியும்! ஏன் முடியாது? தேவன் அவன் பட்சத்திலிருந்தால், யார் அவனுக்கெதிராய் நின்றிட முடியும்?

அவ்வாறாகவே பேதுருவும், தேவன் தன் அன்பின் மிகுதியால் தனக்காய் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கிறார் என்பதைத் திட்டமாய் அறிந்திருந்ததினிமித்தமே, ஏரோதினால் கொலை செய்யப்பட வேண்டிய முந்தினநாள் இராத்திரியில் சிறைச்சாலையிலிருந்து சமாதானமாய்த் தூங்க முடிந்தது! இந்தச் சரியான வேளையில்தான், தேவதூதன் வந்து பேதுருவைத் தட்டி எழுப்பி, தப்பிச்செல்லவும் செய்தான்!! (அப்போஸ்தலர் 12-ம் அதிகாரம்).

நாமும்கூட, நம் வாழ்வில் தேவன் ஒவ்வொன்றையும் - ஒவ்வொருவரையும் தன் சர்வ வல்லமையால் ஆளுகிறார் என்பதை **விசுவாசிப்போமென்றால்,** பிசாசோ அல்லது மனிதர்களோ நமக்கு விரோதமாய் என்ன செய்ய முயற்சித்தாலும் "நிம்மதியாய்! சமாதானத்துடன்!" ஒவ்வொரு நாளும் நித்திரை செய்திட முடியும்.

சர்வத்தையும் ஆளும் தேவனின் வல்லமையை நாம் கண்டு கொண்டால், நாம் "எதற்காகவும்" ஜனங்களிடம் குறைசொல் பேசிட மாட்டோம்! சாத்தான் நமக்கு எந்தத் தீங்கும் செய்துவிடுவானோ என்று ஒருபோதும் அஞ்சவும் மாட்டோம்! வியாதியோ அல்லது வேறு பிணியோ அல்லது இவ்வுலகில் உள்ள வேறெதற்குமோ நாம் துளிகூட பயந்திடவே மாட்டோம்!

நாம் எல்லாவற்றிற்காகவும், எல்லா சூழ்நிலைகளுக்காகவும், **எல்லா மனுஷருக்காகவும்** ஸ்தோத்தரிக்கும்படியே வேதம் கூறுகிறது (எபேசி. 5:20; 1 தெச. 5:8; 1 தீமோ. 2:1). சர்வத்தையும் ஆளும் தேவனின்-சர்வ வல்லமையை நாம் கண்டுகொள்ளும்போது மாத்திரமே, நாம் இவ்வாறு தேவனை அர்த்தபுஷ்டியுடன் ஸ்தோத்தரித்திட முடியும்!

தேவன் எவ்வாறு இயேசுவை கவனித்துப் பாதுகாத்தாரோ "அதே போலவே" நம்மையும் காக்கிறார்! இயேசுவுக்கு உதவி அளித்த அதே கிருபை, அவர் ஜெயம் பெறுவதற்கு அருளப்பட்ட அதே பரிசுத்தாவியின் வல்லமை, இப்போது நமக்கும் அருளப்படுகிறது! அந்த வல்லமையின் மகத்துவம் என்ன தெரியுமா? யூதாஸ் இயேசுவை காட்டிக் கொடுத்தான், பேதுரு அவரை மறுதலித்தான், அவருடைய சீடர்களும்

*அவரை கைவிட்டுச் சென்றனர், திரளான ஜனங்கள் அவருக்குப் பின்முதுகு காட்டி பிரிந்து சென்றனர்! அவர் அநீதியாய் துன்புறுத்தப்பட்டும், பொய்யாய் குற்றம் சாட்டப்பட்டும், சிலுவையில் அறையப்படும்படி அழைத்துச் செல்லப்பட்டார்!!..... இருப்பினும் அவர் கல்வாரிப் பாதையில் செல்லும்போது, திரளானோரைத் திரும்பிப் பார்த்து, "எனக்காக அழாதீர்கள்-***நான் நன்றாகவே இருக்கிறேன்***" என்று அவரால் சொல்ல முடிந்தது!! (லூக்கா 23:28). ஆம், அவரிடம்* **சுய அனுதாபத்தின்** *சிறிய தடயம்கூட காணப்படவில்லை! பரிசுத்தாவியின் வல்லமையினால் அன்றி, இந்தப் பொன்னான வாழ்வை யார் வாழ்ந்திட முடியும்!!*

*தான் பானம் பண்ணிக்கொண்டிருந்த பாத்திரம் பிதாவினாலேயே அனுப்பப்பட்டது என்று அவர் நன்றாய் அறிந்திருந்தார். யூதாஸ்காரியோத்து, அந்தப் பாத்திரத்தைக் கொண்டுவந்த பணிவிடையாள் மாத்திரமே! எனவேதான் அவர் யூதாஸை அன்போடு பார்த்து "சிநேகிதனே" என்று அழைக்க முடிந்தது. தேவனுடைய பரிபூரண ஆளுகையில் விசுவாசம் இல்லாமல் நீங்கள் இவ்விதமாய் சொல்லிவிட ஒருக்காலும் முடியாது! இயேசு பிலாத்துவிடம், "என் பிதா அதிகாரம் கொடுக்காமல், உமக்கு என்மேல் ஒரு அதிகாரமும் இல்லை" என்றார் (யோவான் 19:11). இந்த உறுதியான நம்பிக்கையே, இயேசுவை இந்த உலகில் கனம் பொருந்திய ஒரு ராஜாவைப்போல் நடக்கச் செய்தது! அவர் ஆவிக்குரிய கனத்தோடு ஜீவித்து அதே ஆவிக்குரிய கனத்தோடு மரித்தார்!!*

*இப்போது நாமும் "***இயேசு நடந்தபடியே நடப்பதற்கு***" அழைக்கப்படுகிறோம். அவர் பிலாத்துவுக்கு முன்பாக "நல்ல அறிக்கையை சாட்சியாக விளங்கப் பண்ணியது" போல, நாமும் இந்த அவிசுவாசமுள்ள சந்ததி முன்பாக நல்ல அறிக்கை செய்திடக்கடவோம்!! (2 தீமோ. 6:12-14).*

*தேவன் சகலத்தையும் நன்மைக்கேதுவாய் கிரியை செய்வதின் கடைத்தொகையான அவரது நோக்கம் என்னவெனில், நம்மை அவருடைய திவ்விய சுபாவத்திலும், பரிசுத்தத்திலும் பங்குபெறச் செய்வதற்கேயாகும்! இந்த நோக்கத்தை நம்மில் நிறைவேற்றுவதற்காகவே, தன் மகத்துவமுள்ள ஆளுகையினால் நம் வாழ்வின் பாதையைக் கடக்கும் ஒவ்வொருவரையும் பயன்படுத்திக் கொள்ளுகிறார்! ஆகவேதான் நாம் எல்லா மனுஷருக்காகவும் ஸ்தோத்தரிப்பது நமக்கு சாத்தியமாகிறது!!*

*ஏன் நச்சுப்பிடித்த அண்டைவீட்டாரும், தொந்தரவு கொடுக்கும் உறவினர்களும், அநீதியான எஜமானரும்....போன்றவர்கள் உங்களுக்கு எப்போதும் இடைஞ்சல் தரும்படி தேவன் அனுமதித்திருக்கிறார்? அவர்களுடைய ஜீவனை கண்ணிமைக்கும் நேரத்தில் அவர் பறித்துக்*

*கொண்டு, வாழ்க்கையை உங்களுக்கு மிகவும் சௌகரியமாய் ஆக்கியிருக்க முடியுமே! ஆனால் அவர் அப்படிச் செய்வதே இல்லை! ஏனென்றால், உங்களைப் பரிசுத்தப்படுத்துவதற்காகவே அவர்களை அவர் உபயோகிக்க விரும்புகிறார். அநேக சமயங்களில்* **உங்கள் மூலமாக அவர்களை இரட்சிக்கவும்** *விரும்புகிறார்!!*

*வெற்றியானது. . . . நம்மைச் சுற்றியுள்ளவர்களையோ, வீட்டிலுள்ளவர்களையோ, அலுவலகத்தில் உள்ளவர்களையோ அல்லது இப்பாரினில் வேறெங்கும் உள்ளவர்களையோ ஒருபோதும் சார்ந்திருக்காதபடியால் தேவனை ஸ்தோத்தரிப்போமாக! நமது வெற்றியானது, முழுமையாக தேவனுடைய* **கிருபையைச்** *சார்ந்தே இருக்கிறது! எல்லா சூழ்நிலைகளிலேயும் நம்மை நாமே தேவனுடைய பலத்த கரத்திற்குள் தாழ்த்துவோமென்றால், அந்தக் கிருபையானது நமக்கே சொந்தமாகிவிடும்!! ஆம், வெற்றி நமதே!!*



# 10

இந்த உலகில் பணம் மிகவும் வலிமை நிறைந்ததாய் இருக்கிறது! எனவேதான், நாம் சேவிக்கும்படி இரண்டே எஜமான்கள்தான் இருக்கின்றனர் என தேவனையும், உலகப் பொருளையும் தனித்தனி எஜமானாக இயேசு குறிப்பிட்டு கூறினார் (லூக்கா 16:13). இந்த உலகம் பணத்தின் வலிமையை நம்புகின்றபடியால் “பணத்தினால் எல்லாம் கூடும்” என்கிறார்கள். விசுவாசிகளாகிய நாமோ, **“தேவனால் எல்லாம் கூடும்”** என்கிறோம். ஆனால் அதிகபட்சமாய், அவிசுவாசிகள் தங்கள் தேவன் (பணத்தின்) மேல் வைத்துள்ள விசுவாசமானது, ஜீவனுள்ள மெய் தேவனிடம் விசுவாசிகள் என தங்களைக் கூறிக் கொள்பவர்கள் வைத்திருக்கும் விசுவாசத்தைவிட அதிகமாய் உள்ளதே!?

இவ்வுலகில் நாம் அனுதினமும் பணவிஷயத்தில் ஈடுபாடு கொள்வதால், இப்பகுதியிலும் நாம் **ஜெயம் பெற** வேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது! நீங்கள் விண்ணப்பம் செய்யும் பெர்மிட்டோ அல்லது லைசென்ஸோ அல்லது இதுபோன்ற வேறெதுவோ “பாஸாகுவதற்கு” உங்களிடம் லஞ்சம் கேட்கும் கறைபடிந்த அதிகாரிகளைக் காணும்போது நீங்கள் என்ன செய்வீர்கள்? இந்த உலகமோ லஞ்சத்தினால் எதையும் சாதித்துவிடலாம் என்று நம்புகின்றது! நம்மைக் குறித்து என்ன? பணம் சாதிப்பதைவிட நம் தேவன் பெரிய அற்புதங்களைச் செய்ய முடியாதா? ஆனால் இதற்கென நமக்கு விசுவாசம் இல்லாதிருக்கும் போது, தேவன் நம் பட்சத்திலிருந்து ஒருக்காலும் கிரியை செய்யவே முடியாது. இவ்வுலகில் “கூடாதது ஒன்றுமில்லை” என்பதற்கு **இரண்டு** நபர்களே

இருக்கின்றனர் என இயேசு கூறினார். ஒன்று தேவன்! இரண்டாவது “மெய்யாய் விசுவாசிக்கும்” ஓர் விசுவாசி!! (மாற்கு 10:27; 9:23).

**1) தேவனாலும் 2) விசுவாசிக்கிறவனாலும்,** கூடாதது ஒன்றுமில்லை! இது கிட்டத்தட்ட நம்பமுடியாததொரு அற்புதமேயாகும். ஆனால் உண்மையாகவே இந்த விசுவாசத்திற்கு, சர்வவல்ல தேவனின் வல்லமையோடு நம்மை இணைப்பதற்கு அவ்வளவு வலிமை இருக்கிறது. இப்படிப்பட்ட விசுவாசத்தாலேயே, நம்மைச் சுற்றியுள்ள இந்த உலகத்திற்கு, **“தேவன் பணத்தைவிட மேலானவர்”** என்று நாம் நிரூபித்துக் காட்டவேண்டும்! நாம் லஞ்சம் கொடுப்பதே இல்லை!! மெய் விசுவாசத்துடன் ஜெபிக்க மாத்திரமே செய்கிறோம்!!

பெங்களூரில் எங்களுடைய மீட்டிங்-ஹால் கட்டுவதற்கு அரசாங்கத்திடம் சிமிண்ட் பெர்மிட் வாங்க வேண்டியிருந்தது. இது சம்பந்தமான கிளார்க்கை நான் சந்தித்தபோது, அவர் என்னை அடுத்த வாரம் வரும்படி கூறினார். அடுத்த வாரம் நான் சென்றபோதோ மீண்டும் சில நாட்கள் கழித்து வரச்சொன்னார்.... இவ்விதமாக, மாறி மாறி நடந்து கொண்டிருந்தபோது, அரசாங்க அலுவலகங்களின் வழிமுறைகளை நன்கு அறிந்த புத்திசாலியான ஒருவர் “அந்தக் கிளார்க் மறைமுகமாக லஞ்சம் கேட்கிறார்!” என்று எனக்கு எடுத்துக் கூறினார்.

எங்களுக்கோ லஞ்சம் தருவது என்ற பேச்சிற்கே இடமில்லை. அதற்கு பதிலாக நாங்கள் ஜெபம் செய்தோம். நானோ அரசாங்க அலுவலகத்திற்கு மறுபடியும் மறுபடியும் சென்று ஏராளமான **பொறுமையைக் கற்றுக்கொண்டேன்!** கடைசியில், சில மாதங்களுக்குப் பிறகு நாங்கள் சிமிண்ட் பெர்மிட்டைப் பெற்றோம்! நான் சிமிண்டிற்கு மாத்திரம்தானே விண்ணப்பம் செய்தேன்?!. . . ஆனால் இப்போதோ, நான் பொறுமையையும் சேர்த்து அல்லவா பெற்றிருக்கிறேன்!! ஆம், நாம் கேட்பதற்கும் விரும்புவதற்கும் மேலாகவே தேவன் கொடுக்கிறார். அல்லேலூயா!!!

திவ்விய சுபாவமாகிய பொறுமையை நான் பெற்றுக்கொள்ளும் படி, ‘கறைப்பட்ட ஓர் அதிகாரியையும்’ தேவன் உபயோகிக்க முடிந்தது மிகப்பெரிய அற்புதமாகும்!! நான் அந்த மனிதனுக்கு லஞ்சத்தைக் கொடுத்திருந்தால் சிமெண்டை சீக்கிரத்தில் பெற்றிருப்பேன். “ஆனால்” பொறுமையைப் பெற்றிருக்கமாட்டேன்! தேவனுடைய வழிகள் எல்லாம் இப்படிப்பட்டதுதான்! நாம் அவரைக் கனப்படுத்தினால். . . அவர் நம்மை நிச்சயம் கனப்படுத்துவார்!! (1 சாமுவேல் 2:30).

தேவசித்தத்தின் எல்லைக்கு வெளியே நமக்கென்று எந்தவித நோக்கமும் (Ambitions) இல்லையென்றால், நமக்கு ஒருபோதும் பிரச்சனையே இருக்காது. பெங்களூர் சபையில் இருந்த எங்களைப் பொறுத்தவரையில், தேவன் எங்களுக்கு சிமெண்ட் கொடுக்க விரும்பினால் மாத்திரமே சிமெண்ட் பெற விரும்பினோம். ஒரு மீட்டிங்-

*ஹாலை தர தேவனுக்கு விருப்பம் இல்லையென்றால், நாங்களும் அப்படியே விரும்பவில்லைதான்! தேவன் குறித்த நேரத்திற்கு முன்பாக, அந்த ஹாலைப் பெறுவதற்கு நாங்கள் ஒருபோதும் விரும்பவில்லை. எனவே சிமெண்ட் பெர்மிட் வருவதற்கு நான்கு வருடங்கள் ஆனாலும், நாங்கள் காத்திருப்பதற்குத் தயாராய் இருந்தோம். தேவனுடைய கால அட்டவணை எப்போதும் பூரணமானவைகள். ஆம், அவர் ஒருபோதும் காலம் தவறாதவர், சிறிதுகூட தாமதம் செய்யவே மாட்டார்!*

*எந்தத் தேதியில் நாங்கள் சிமெண்ட் பெறவேண்டும் என்று தேவன் தீர்மானிக்கிறாரோ, சரியாய் அந்தத் தேதியில் நாங்கள் அதைப் பெறுவோம். இவ்விதம் நாங்கள் தேவனுடைய கால அட்டவணைப்படி பெறுவதை, இப்பூமியில் உள்ள எந்த வல்லமையும் தடுத்து நிறுத்தவே முடியாது. இவ்வாறு நாம்* **தேவனுடைய நேரத்திற்காக** *காத்திருக்க ஆயத்தமாயிருந்தால், தேவன் தனக்கே உரிய வழியில், தன்னுடைய நேரப்படி, சம்பந்தப்பட்ட அலுவலக அதிகாரிகளிடம் அவரே நேரடியாக இடைப்படுவார்!*

*பொறுமை இழந்ததினிமித்தமே சவுல் தன் இராஜ்யத்தையே இழந்தான்! (1 சாமு.13:8-14). இந்தப் பொறுமையின்மையினாலேயே இன்று அநேகர் தேவனுக்குரிய மேலானவைகளை இழக்கின்றனர். நீங்கள் சத்தியத்திற்காகவும், நீதிக்காகவும் உறுதியாய் நின்று. . . பின்பு மனப்பூர்வமாய் தேவனுடைய நேரத்திற்காய் காத்திருப்பீர்களென்றால், எந்த ஊழல் அதிகாரியும் உங்கள் வாழ்க்கையில் தேவன் கொண்ட திட்டத்தை குலைக்கவே முடியாது! ஆம், நாம் விசுவாசத்தினாலும் பொறுமையினாலுமே வாக்குத்தத்தத்தை சுதந்தரித்துக் கொள்ளுகிறோம் (எபிரெயர் 6:12).*

*இதே அடிப்படையிலான சத்தியம்தான் நம் வீட்டுத் தேவைக்குரிய பொருளாதாரத்திற்கும் பொருந்தும்.* **நம்முடைய விசுவாசம் தேவன் பேரிலேயே அன்றி பணத்தின் மீது ஒருபோதும் இருந்திடக்கூடாது.** *அவ்வாறு உங்கள் குடும்பத்தை தேவனுடைய இராஜ்யத்தின் பிரமாணங்களின்படி நடத்துவீர்களென்றால், உங்கள் தேவைக்குப் போதுமான பணம் எப்போதும் உங்களிடம் இருக்கும். நீங்கள் ஐசுவரியவானாய் மாறாமல் இருக்கலாம். ஆனால் நீங்கள் ஒருபோதும் இரந்து கேட்கவேண்டிய நிலையே வராது! (சங்கீதம் 37:25; மத்.6:33).*

*"முழு நேர ஊழியத்திற்கென்று" விசுவாசத்தில் அடியெடுத்து வைத்த அநேக உண்மையான கிறிஸ்தவர்கள், இரண்டு வருடத்திற்குள்ளாகவே 'கௌரவ பிச்சைக்காரர்களாக' மாறி விடுகின்றனர். இவர்கள் மாதந்தோறும் ஜெப சுற்றறிக்கையை (இது, "பிச்சை கேட்கும் - சுற்றறிக்கையின்" மாற்றுப்பெயரே அல்லாமல் வேறு அல்ல!) அனுப்பி, மிகத் தந்திரமாகத் தங்கள் பொருளாதாரத் தேவைகளைக் குறிப்பிட்டிருப்பார்கள். இப்படிப்பட்ட சுற்றறிக்கையை நிறுத்திவிட்டு இவர்கள் ஏன் பரலோகின் பிதாவை நம்பக்கூடாது?*

*என்னுடைய மாதாந்திர சிறிய தேவைக்கே அவர் போதுமானவரா யில்லையென்றால், அவருக்கு ஊழியம் செய்வதையே நிறுத்திவிட வேண்டும். இவ்வாறான சூழ்நிலைகளை வைத்தே தேவனும் நம்மை சோதித்தறிய விரும்புகிறார். உலகப்பொருளும்* (mammon) *நம் கவனத்தை ஈர்த்துக்கொள்ள நாடுகிறது! நாம் யாரை விசுவாசிக்கப் போகிறோம்?*

*தேவன் விரும்புவதெதுவோ அதுவே உங்கள் விருப்பமாயுமிருக்குமென்றால், எந்நிலையிலும் உங்களுக்கு ஒரு பிரச்சனையும் இருக்காது. நீங்கள் வைத்துக்கொள்ளும்படி தேவன் விரும்பாத எதையும் நீங்கள் வாங்குவதற்கோ, உரிமை கொள்வதற்கோ ஆர்வம் கொள்ளவில்லையென்றால், நீங்கள் எப்போதும் இளைப்பாறுதலில் இருக்கலாம். ஏனெனில், உங்களுக்குத் தேவையிருந்தால் அதை அற்புதமாய் தேவன் வழங்கிடுவாரே! ஆனால் உலகப்பொருளின் மீது கொண்ட இச்சையை திருப்தி செய்வதற்காக 'இதையும் அதையும்' வாங்குவதற்கு விரும்புவீர்களென்றால், நீங்கள் எப்போதும் பிரச்சனைக்குள்தான் ஓடி நிற்பீர்கள்!!*

*இதே விசுவாசத்தின் அடிப்படைதான் நமக்குரிய வாழ்க்கைத் துணையைக் கண்டுகொள்ளும் விஷயத்திற்கும் பொருந்தும். "வீடும் ஆஸ்தியும் ஓர் தகப்பன் தன் மகனுக்குத் தரமுடியும். ஆனால் புத்தியுள்ள மனைவியையோ கர்த்தர் மாத்திரமே அருள முடியும்" (நீதி.11:14* - Living Bible).

***உங்கள் வாழ்க்கைத் துணைவியாய் இருக்கும்படி தேவன் யாரையேனும் முன்குறித்திருக்கும்போது "அந்த நபரை" வேறு யாரும் அபகரித்துச் சென்றுவிடுவார்கள் என்ற அபாயம் ஏற்படுமோ? நிச்சயம் இல்லை. . . நீங்கள் சர்வவல்ல தேவனின் ஆளுகையை விசுவாசிக்கும் வரை!?***

*நீங்கள் பொறுமையிழந்து "பாய்ந்து சென்று" பற்றிக்கொள்ளும் அவசியமும் இல்லை. தேவன் அந்த நபரை உங்களுக்காகவே வைத்து வைப்பதற்கு வல்லவர்! நீங்கள் இளைப்பாறுதலிலேயே இருக்கலாம்!! ஆம், தேவன் ஆதாமை நித்திரைக்குள்ளாக்கினார்! இவ்வாறு ஆதாம் இளைப்பாறிக் கொண்டிருக்கும்போதுதான் (துணையைத் தேடி அவன் தோட்டத்தைச் சுற்றி அவசர அவசரமாய் ஓடிக்கொண்டிருக்கவில்லை), தேவன் அவனுக்கென்று ஓர் மனைவியை ஆயத்தப்படுத்தினார். அதற்குப் பிறகு, அவர் அவனை எழுப்பி ஏவாளை அவனுக்கு கொடுத்தார். ஆதாமை தேவன் எவ்வளவு நேசித்தாரோ அதே அளவு உங்களையும் நேசிக்கிறபடியால் அவர் உங்களுக்கும் அப்படியே செய்வார்!*

*தேவனுடைய சித்தத்தின் எல்லைக்கு வெளியே உங்களுக்கு எந்தவித நோக்கமும் இல்லாமல், தேவனுடைய சித்தத்திற்கு உட்பட்டு 'நீங்கள் தனித்திருக்கவும்' ஆயத்தமென்றால் இப்போது நீங்கள் எதற்கும் அஞ்சவேண்டிய அவசியமேயில்லை. தங்களுக்குரிய எல்லாவற்றையும்*

*அவரிடம் ஒப்புவித்தவர்களுக்காக கிரியை செய்யும்படி தேவனுடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது (2 நாளா.16:9). ஓ, நமக்குத்தான் எவ்வளவு அருமையான தேவன் இருக்கிறார்!*

*ஆம், "***நம்முடைய விசுவாசமே** *உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1 யோவான் 5:4). தேவனின் பரிபூரண ஞானம், அன்பு, மேலும் அவரது வல்லமையில் உங்களுக்கு விசுவாசம் இருக்குமென்றால், நீங்கள் இந்த உலகத்தையும் அதின் அதிபதியையும் அதன் வல்லமையையும் (உலகப் பொருள், சிற்றின்பம், மனுஷீகப் புகழ்ச்சி போன்றவைகளை) எப்போதும் ஜெயித்துக்கொண்டே இருப்பீர்கள்!!*

*இப்படியெல்லாம் சத்தியம் இருந்தும், உங்களுக்குச் சர்வவல்ல தேவனின் ஆளுகையிலும், அவரது அன்பிலும்* **விசுவாசம்** *இல்லையென்றால், நீங்கள் இவ்வுலகத்தோடும். . . ஆதாமின் பிள்ளைகளோடும் மூழ்கி வீழ்வதையே கண்டுகொள்வீர்கள். இந்த ஆதாமின் வாழ்க்கை, இவ்வுலகத்தோடு ஒத்துப்போகும், அவபக்தியும் சஞ்சலமும் நிறைந்த வாழ்க்கையாகும்!! ஆ, அது வேதனை!!*

## பெலனற்றவர்களுக்கு உதவும் தேவன்



# 11

இயலாதவனுக்கல்ல, தன்னால் இயன்ற ஒருவனுக்கே கடவுளும் உதவிசெய்வார் என்று இந்த உலகம் கூறுகிறது! ஆனால் வேதமோ, **இயலாத ஒருவனுக்கே** தேவன் உதவுகிறார் என்று கூறுகிறது. அவர் பெலவீனர்களின், திக்கற்றவர்களின் தேவன்! அவர் தன்னை, விதவைகளின்; அனாதைகளின்; நிராகதியற்றவர்களின் தேவன் என்றே அழைத்துக் கொள்ள விரும்புகிறார் (உபாகமம் 10:17-18). அவர் தன்னை ஐசுவரியவானின், பெலவானின் தேவன் என்று அழைத்துக்கொள்ள விரும்புவதில்லை! ஏனெனில் இவர்களெல்லோரும் மனுஷீக, பொருளாதார உதவியில் புகலிடம் கண்டவர்கள்!! ஆனால் நம் தேவனோ, மனுஷீக அல்லது பொருளாதார உதவியில் புகலிடம் தேடாமல், பெலவீனமான உதவியற்றவர் களுக்கே தேவனானவர்!!

ஆம், தேவன் எப்போதும் பெலவீனர்களின் பக்கமே நிற்பவர்! எனவேதான் அவர் நமக்கு உதவுவதற்கு முன்பாக நம்மை பெலன் குன்றச் செய்யவேண்டியதாய் இருக்கிறது. பவுலை பெலவீனப் படுத்த, தேவன் அவனுடைய மாம்சத்தில் ஓர் முள்ளைக் கொடுத்து அவனைப் பெலவீனப்படுத்தினார் என வாசிக்கிறோம் (2 கொரி. 12:7-10).

ஐசுவரியத்தையும், பொருள் படைத்த நண்பர்களையும் சார்ந்து கொண்டு, அதில் திருப்தி காண்பீர்களென்றால், உங்களின் சொந்த வழிக்கே தேவன் உங்களை விட்டுவிடுவார். உங்கள் பேங்க் அக்கவுண்ட், மற்றும் பொருள் படைத்த மனிதர்கள் போன்ற "மாம்சத்தின் புயபலத்தில்" நீங்கள்

வைத்திருக்கும் உங்கள் நம்பிக்கையை தேவன் பார்க்கிறபடியால், சகாயம் வேண்டி ஜெபிக்கும் உங்கள் ஜெபத்திற்குப் பதில் தரவும் மாட்டார்!!

எவ்வித மனுஷீக மூலதனத்தையோ அல்லது யாதொரு ஜனங்களையோ சார்ந்திருக்க முடியாத பெலவீனமான ஸ்தானத்திற்குள் நீங்கள் வந்துவிட முடியுமென்றால், இப்பூவுலகில் நீங்களே மிகவும் பாக்கியம் பெற்றவர்களாயிருப்பீர்கள். ஏன் தெரியுமா? இந்த பாக்கிய நிலையில்தான், தேவன் ஒருவனை ஆதரித்திட விரைந்து வருகிறார்! இந்நிலையில் உள்ளவர்கள் மாத்திரமே, எல்லாவற்றிற்கும் தேவனை நம்பி இருந்திட முடியும்.

யூதாவின் ராஜாவாகிய ஆசாவுக்குத் தேவன் ஒரு தடவைக்கும் மேலாகவே உதவி செய்திருந்தார். அப்படியிருந்தும், அவனுக்கு கால்களில் கடுமையான வியாதி கண்டபோது, "அவன் கர்த்தரை அல்ல, டாக்டர்களையே தேடினான்" என்று எழுதப்பட்டிருக்கிறது. "**எனவே** ஆசா மரித்தான்" என்றும் வாசிக்கிறோம் (2 நாளா.6:12,13). அவன் ராஜாவாயிருந்தபடியால், தேசத்தில் இருக்கும் சிறந்த வைத்திய நிபுணர்களுக்கு "பீஸ்" கட்டுவதற்குப் பணம் படைத்தவனாயிருந்தான். இருப்பினும், அவனிடம் இருந்த பணத்தின் படோடாபம் ஒன்றும் அவனுடைய நோயைக் குணமாக்க முடியவில்லை. எளிமையான விசுவாசத்தோடு அவன் கர்த்தரை நம்பியிருந்தால் காரியம் எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்!!

உங்களுக்கு தேவன் மாத்திரமே சகாயராக இருக்கும் எல்லைக்குள் **நிலைத்திருப்பது** மிகவும் சொல்லிமுடியா பாக்கியமாகும்! நீங்கள் தேவனுடைய மேன்மையை மாத்திரம் தேடும் ஒருவராக இருந்தால், "மாம்சத்தின் மார்பில் சாய்ந்திருக்கும் உங்களைப் பால்குடி மறக்கச் செய்யும்படி" **தேவனின் பலவந்தச் செயலைக்** கண்டுகொள்வீர்கள். ஆம், நீங்கள் அவர்மேல் மாத்திரமே சாய்ந்திருக்கும்படியாக, அவ்வித பலவந்த செயல் மூலமாக அவர் உங்களைப் பெலவீனப்படுத்துவார்!

எலியாவோடு தேவன் இடைப்பட்டதைக் கவனித்துப் பாருங்கள். இஸ்ரவேல் தேசத்தில் பஞ்சம் உண்டானபோது, எலியாவைக் காகங்கள் மூலமாகவும், ஓர் ஆற்று நீரோடை மூலமாகவும் தேவன் போஷித்தார் (2 இராஜா.17:1-7). ஒரு நாளைக்கு இரண்டுவேளை, காகங்கள் அவனுக்கு அப்பமும், இறைச்சியும் கொண்டுவந்தது. அதேபோல், ஆற்றண்டையில் எப்போதும் குடிப்பதற்குப் போதுமான தண்ணீர் இருந்துகொண்டே இருந்தது. இவ்வாறு தொடர்ந்து நடைபெற்றதால், எலியா தேவனைக் காட்டிலும் "**காகங்களை நம்பும்**" அபாயநிலைக்கு வந்துவிட்டான். எனவே, தேவன் இப்போது தன்னுடைய போஷிக்கும் வழியை மாற்றிவிடுவதற்குத் தீர்மானித்தார்.

ஒருநாள் காலையில், இக்காகங்கள் வருவது நின்றுவிட்டது! எலியா ஆற்றண்டை சென்றபோது, அதுவும் வற்றிப் போயிருந்ததைக்

*கண்டான்!!* **ஆம், தன்னுடைய ஊழியன் காகங்களையும், ஆற்று நீரோடையையும் சார்ந்து நம்பியிருந்ததை நிறுத்துவதற்கே தேவன் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தார்.** *இறைச்சியைத் தின்னும் காகம் தன்னுடைய சுபாவத்திற்கு முரணாய், இறைச்சியை தன்னுடைய ஊழியனுக்குத் தரும்படி செய்த தேவன்.... இப்போது எவ்வழியாகிலும் நம்மைப் போஷிப்பார் என்று அவர்மீது நம்பிக்கை கொள்வது கடினம் இல்லையே!*

*எனவேதான், தேவன் எலியாவை சாறிபாத்திற்குச் செல்லம்படிக் கூறினார். அங்கு தேவன் தன் ஊழியனை ஒரு பணக்கார வியாபாரி மூலமாய் அல்ல, ஓர் வயதான; நிர்க்கதியற்ற; வறுமையில் பாதிக்கப்பட்ட விதவையின் மூலமாகவே போஷித்தார். நாமாயிருந்திருப்போமென்றால், இப்பணிக்குத் தேர்ந்தெடுப்பதற்கு இந்த ஏழை விதவையை கீழ்த்தரமான கடைசி ஸ்தானத்திலேயே பார்த்திருப்போம். ஆனால் தேவனுடைய வழிகளோ நம்முடைய வழிகளுக்கு முற்றிலும் வேறுபட்டதாகும். நம்முடைய விசுவாசம்,* **உதவி வரும் வழியின்மேல்** *அல்ல,* **தேவன் மேலேயே** *இருக்கும்படியாகத் தேவன் மிகக் குறைந்த கனவீனமான வழிகளையே உபயோகிப்பதில் பிரியம் கொள்ளுகிறார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி, உலகத்தில் பலவீனமானவைகளையே தேவன் தெரிந்துகொண்டார்! மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாக பெருமை பாராட்டாதபடி, இழிவானவைகளையே தேவன் தெரிந்துகொண்டு ஞானிகளை வெட்கப்படுத்துகிறார்! (1 கொரி.1:27-29).*

*அநேக காலமாக நம்மைப் போஷித்த காகங்கள் ஒருநாள் வரவில்லையென்றால், அந்தநாள் நம் வாழ்க்கையில் ஓர் பொன்னாள்! 'இப்போது' நாம் தேவனை மாத்திரமே நம்பியிருக்க ஆரம்பிக்கிறோம். உங்களுக்கு "உதவி செய்வேன்" என்று வாக்கு செய்த ஒருவர் உங்களை கைவிட்டுவிடுவாரென்றால், அவரை ஒருபோதும் குறைகூறாதீர்கள்.* **நீங்கள் தேவனை மாத்திரமே** *சார்ந்திருக்கக் கற்றுக்கொள்ளும்படி, எலியாவுக்குத் தேவன் காகங்கள் அனுப்புவதை நிறுத்தியதுபோல, உங்களுக்கு உதவி செய்யும் ஒருவரைத் தேவனே நிறுத்தியிருக்கக் கூடும்!*

*நம் தேவன், தன்னுடைய மகிமையை வேறொருவருக்கும் கொடாத வைராக்கியமான தேவன்! "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்" என்ற வசனம் நமக்குள் மீண்டும் மீண்டும் தொனித்துக்கொண்டே இருக்க வேண்டும். ஏனெனில், நம்முடைய மாம்சத்திற்கு,* **விக்கிரக ஆராதனையான** *பொருளாதார அல்லது மனுஷீக மூலதனங்களைப் பற்றி சார்ந்திருப்பதற்கு அதிகமான ஈர்ப்பு சக்தி உண்டு. நம்முடைய எல்லாத் தேவைக்கும்* **அவரையே** *சார்ந்திருக்கும்படி தேவன் விரும்புகிறார்! இவ்வாறு இருக்க முடியுமென்றால், நாம் நிச்சயமாய் எப்போதும் வெற்றியுடன் வாழ்ந்திட முடியும்!!*

12

இதுகாறும் நாம் பார்த்த **எல்லாவற்றிற்கும்,** நம்முடைய இரட்சிப்பானது கிருபையினாலும்; விசுவாசத்தின் மூலமாகவுமே உண்டாகிறது (எபேசியர்2:8). நம்முடைய பாவ மன்னிப்பையும், ஆவியின் அபிஷேகத்தையும், கிருபையினால் விசுவாசத்தின் மூலமாகவே பெற்றோம். இப்படித்தான் நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தை நாம் தொடங்கினோம். ஒருநாள் நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மகிமையில் வரும்போது, நாம் அவரைச் சந்திக்கும்படி ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப் படுவோமே.... அதுவும், கிருபை யினால் விசுவாசத்தின் மூலமாய் நிகழப்போகும் நிகழ்ச்சியே ஆகும்!!

எனவே இப்பூமியில் நம்முடைய ஆரம்பமும் முடிவுமான கிறிஸ்தவ வாழ்க்கை கிருபையினால் விசுவாசத்தின் மூலமாகவே நிறைவேறுகிறது. மாத்திரமல்ல, ஆரம்பத்திற்கும் முடிவிற்கும் “இடையிலான வாழ்க்கையில்” நாம் பெற்றுக் கொள்ளும் ஒவ்வொன்றுமே இதே அடிப்படையில் தான் நிகழ்கிறது என்பதை நாம் கற்றக்கொள்வது மிகவும் அவசியம். கிருபையினால், விசுவாசத்தின் மூலமாகவே நாம் ஒவ்வொரு தீமையையும் மேற்கொண்டு, இப்பூமியில் தேவன் முன் குறித்த நோக்கத்தை நம் வாழ்வில் நிறைவேற்ற முடியும்!!



எதிர்காலங்களைத் தேவன் அறிவார் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். தேவனை வியப்புறச் செய்யும் படி, நாளையோ அல்லது அடுத்த வாரமோ அல்லது அடுத்த மாதமோ அல்லது அடுத்த வருடமோ ஒன்றும் நிகழ்ந்திட முடியாது! அவருக்கு ஆரம்பத்திலிருந்து முடிவுவரை எல்லாம் தெரியும்!! இந்த உண்மை மிகப் பெரிய ஆறுதலை நமக்குத் தரவேண்டும். ஏனெனில்,

நீங்கள் திரளான சோதனைகளையும், பரீட்சையையும், நாளை அல்லது அடுத்த வாரம் சந்திக்கப்போகிறீர்கள் என்று தேவன் அறிந்திருந்தால், நீங்கள் அதை மேற்கொள்ளும்படியாக நிச்சயம் தன் **கிருபையையும்** தருவார்!

2 கொரிந்தியர் 12:9, அவர் கிருபை நம் எல்லாத் தேவைக்கும் போதுமானது என அறைகூவுகிறது. நாம் எல்லாவற்றிலும், எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகள் பெருகுவதி னிமித்தம் அவரின் பூரண சித்தத்தை நிறைவேற்றும் படியாகவும், தேவன் நம்மிடத்தில் “**சகலவித கிருபையையும்**” பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார் (2 கொரி9:8).

ஏற்ற வேளையில் நமக்குச் சகாயம் செய்யும்படி, கிருபையானது பூரணமாய் நமக்கு அருளப்பட்டிருக்கிறது (எபி.4:16). உங்கள் தேவை எதுவாயிருந்தாலும் அதை நீங்கள் சந்திக்கும்படி கிருபையானது உங்களுக்கு உதவி அளிக்கிறது. எனவே, நாம் இந்த கிருபையைப் பெறும்படி “தைரியமாய் கிருபாசனத்தண்டை வரும்படி” அழைக்கப்படுகிறோம்.

இந்தக் கிருபையைப் பெறாததாலேயே கடந்த காலங்களில் நாம் தோற்கடிக்கப்பட்டிருந்தோம்! இனிவரும் நாட்களில் முற்றிலும் வித்தியாசமான அத்தியாயத்திற்குள் நாம் பிரவேசித்திட முடியும். ஆம், நம்மை நாமே தாழ்த்தி, தேவையான நேரத்தில் கிருபைக்காய் கதறும்போது தேவன் ஒருபோதும் நம்மை ஏமாந்துபோகச் செய்திடமாட்டார்!

கிருபையின் பரிபூரணத்தைப் பெறுகிறவர்கள், இயேசுகிறிஸ்து மூலமாய் வாழ்க்கையில் ஆளுகை செய்வார்கள் எனவும் வேதம் கூறுகிறது (ரோமர் 5:17). இவ்விதமாய் சகலத்தையும் ஆளுகை செய்யவேண்டும் என்பதே, தேவன் ஆதாமைக் குறித்து வைத்திருந்த அவரது சித்தமாகும். (ஆதி. 1:26). ஆகிலும், அவனுடைய வாழ்க்கையில் இச்சித்தம் நிறைவேறுவதற்கு ஆதாமின் கீழ்ப்படியாமை தடை செய்துவிட்டது.

ஆனால் இப்போதோ தேவன் ஓர் புதிய சந்ததியை இப்பூமியில் எழுப்பியிருக்கிறார்! யார் இவர்கள்? ராஜாவின் கனத்திற்கொப்பாய் ஜீவித்து, இவ்வுலகை ஆளுகைசெய்யும்படி இயேசுகிறிஸ்துவுக்குள் விசுவாசத்தினால் ஜீவிக்கும் தேவனுடைய புத்திரர்கள்!! நீங்கள் மாத்திரம் உங்களைத் தாழ்த்தி தேவனுடைய கிருபையைப் பெறுவீர்களென்றால், **எந்தப் பாவமும்** இனி உங்களை ஒருபோதும் ஆளுகை செய்யவேண்டிய தேவையே இல்லை! உங்கள் இருதயத்திற்குள் **எந்தப்பயமும், பதட்டமும்** இனி ஒருபோதும் பிரவேசிக்க வேண்டிய அவசியமே இல்லை!! இனியும் உங்கள் வாழ்க்கையை துக்ககரமாக்கிட ஒருவராலும் முடியாது!! உங்கள் மேல் அதிகாரியோ, அண்டை வீட்டாரோ, உறவினரோ, சத்துருக்களோ அல்லது வேறு எவருமோ உங்கள் வாழ்க்கையை துயரம் அடையச் செய்யவே முடியாது!! ஏன்? ஏனெனில் நீங்கள்தான் இப்போது

**வெற்றியின் இரகசியங்களைக்** *கற்றுக்கொண்டுவிட்டீர்களே!!! கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை எப்போதும் வெற்றி சிறக்கச் செய்யும் தேவனுக்கே ஸ்தோத்திரம்!!*

*புதிய உடன்படிக்கையின் கிருபைக்குக் கீழாய் ஜீவிப்பது எத்தனை ஆச்சரியம்! அற்புதம்!!*

*ஏறெடுத்துப் பாருங்கள்!* **இன்னமும்** *தேசம் உங்களுக்கு முன்பாகவே வைக்கப்பட்டிருக்கிறது. வீறுகொண்டு எழுந்து அதைச் சுதந்தரியுங்கள்!! ஆம், வெற்றி நமதே!!!*